கொட்டும் முரசு

# தாயக ஒலி

THAYAKA OLI


இரு திங்கள் ஏடு 12



ஆடி - ஆவணி 2014

விலை ரூபா 80/=

தரமான தங்க நகைகளுக்கு நாடவேண்டிய
நம்பிக்கை நகைமாளிகை ரதி ஜுவல்லர்ஸ்



RATHY
Jewellers | Tooting

209 Upper Tooting Road, Tooting SW17 7TG
T: 020 8682 2233 F: 020 8767 7600
E: rathyjewellers@hotmail.co.uk

28 Ealing Road, Wembley Middx HA0 4TL T: 020 8903 3063

# நாங்களும்! நீங்களும்!

உங்கள் ஆதரவு இமயம் என்றால்
எங்கள் சேவை இமயத்தின் சிகரம். ஏ-லங்கா ரவல்

**விமானப்பயணிகள் பொதுவாகக் கவனிக்கவேண்டிய**
**முக்கிய விடயங்கள்**

- கடவுச் சீட்டுகளும் கட்டுப்பாடுகளும் ✓
- விசா விபரங்களும் விதிமுறைகளும் ✓
- பிரயாணிகளின் வயதெல்லைகளும் வசதிகளும் ✓
- சிசு-சிறுவர்களும் சின்ன சின்ன விடயங்களும் ✓
- இடைநிறுத்தல்களும் அவகாச நேரங்களும் ✓
- தரிப்பிடங்களும் தங்குமிட வசதிகளும் ✓
- பொதிகளின் அளவுகளும் பொருத்தங்களும் ✓
- முதியவர்களும் முக்கியமான தேவைகளும் ✓
- திகதி மாற்றங்களும் தில்லுமுல்லுக்களும் ✓
- தொப்புள்கொடி உறவுகளும் தொடர்பான சேவைகளும் ✓
- தாயக தகவல்களும் தகுந்த ஆலோசனைகளும் ✓
- உலகளாவிய உலாத்தல்களும் உத்தரவாதங்களும் ✓
- இரத்து செய்தலும் கழிவுக்கொடுப்பனவுகளும் ✓
- பிரயாணத்தின் இலவச நீட்டல்களும் குறுக்கல்களும் ✓

**உங்கள் தேவைகள் எமது சேவைகள் 100 %**




1. நிதானமான வழிநடத்தல்
2. நியாயமான விலைகள்
3. பொருத்தமான ஆலோசனைகள்
4. சினேகபூர்வமான சேவைகள்
5. இனிய தமிழில் இலகுவான கலந்துரையாடல்

சேவையே எமது சிந்தனை

ஏ-லங்கா ரவல், ஏரோ லங்காவின் (யாழ்ப்பாண சேவை)
பிரித்தானியாவின் ஏக முகவர்.




**A-Lanka Travel Ltd**

*We make it easy to take it easy*

TOOTING BROADWAY

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ

**020 8672 5551, 020 8672 2010**



.....make your event that little more special
SPECIALISTS IN PURE VEGETARIAN FOOD
INCLUDING STARTERS, MAIN COURSES AND DESERTS (MITHAI)
CATERING FOR EVERY OCCASION
...tempting?
discover a new heaven on earth:
ORDER ON LINE
FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details
POOJA
SWEETS & SAVOURIES
The Taste That You Will Love, The Quality That You Can Trust
TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com
KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com

# Select

S

Lettings

Mortgages

Maintenance

'Select your next move with US'

Guaranteed Rent throughout London

In - house property maintenance team

**0208 45 470 1500**

288 High Street North
London, E12 6SA
www.select.gb.com

London Landlord Accreditation Scheme

OFT Approved code

GAS safe REGISTER

NAPIT

ELECSA Part of the ECA Group

rightmove.co.uk

Zoopla.co.uk Your advantage in property

# Kanaga Solicitors

**KEY PERSONNEL**

Name : Kanakavalli Nadarajanpillay
Kanaga Solicitors
108 High Street, Colliers Wood
London - SW 19 2 BT

Position in the firm : Principal & Solicitor

**Academic/ professional Qualifications:**
L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, solicitor of the Supreme Court f of England and Wales.

**Previous Experience:**

**Relevant and Present Experience:**

Successful practitioner with 13years of experience as a Criminal, Civil, Family, Drugs related offences, Personnel Injury, Land Law matters, Wills Probate and Corporate litigation. lawyer in the High Courts of Malaya.

**Civil Litigation**
**Land matters**
**Family Law**
**Contract and Injunctions**
**Company and Corporate law matters and winding up of Companies**
**Bankruptcy**
**Motor Accident Claims**

**Criminal Litigation**
**Penal Offences under the Penal Code**
**Offences under the Dangerous Drugs Act.**



***Tel: 020 8544 1100***
***108 High Street, Colliers Wood***
***London - SW 19 2 BT***

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# 'தாயக ஒலி'

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி - ஆவணி 2014 வில் - 02 ஒலி - 12

**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும்**
**இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும்**
**இணைந்து வெளியிடும்**

**'தாயக ஒலி'**

**பிரதம ஆசிரியர்**
த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)
தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**
தாயகன் (இலண்டன்), சி.பவன் (இலங்கை)

**மதியுரைக் குழு**
பேராசிரியர் சபா ஜெயராசா
வவுனியூர் இரா உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
ஸ்ரீபதி சிவனடியான் (இலண்டன்)

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள்:**
கனடா : முருகேசு கிருபாகரன்
து.நடராஜா
இலண்டன் : சி.அமிர்தலிங்கம்
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்

**ஐரோப்பிய நாடுகளுக்கான**
**விசேட ஒருங்கிணைப்பாளர்**
திருமலை பாலா
தொ.பேசி : 0044 (0)7956486014

**தொடர்பு :**
9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு – 06, இலங்கை.
தொ.பேசி : 0094(0)112364124

**E-Mail : thayakaoli@gmail.com**

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புகளுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்.
–ஆசிரியர்–

**தரணியெங்கும் பவனி வரும்**
**மானிடத்தின் மனோரதம்**

## உள்ளே ஒலிப்பவை

| | பக்கம் |
|---|---|
| பேனா முனையிலிருந்து..... | 02 |
| **கட்டுரை :** | |
| ● பேராசிரியர் சு.வித்தியானந்தன் | 03 |
| ● அறிஞர் முகமது சமீம் | 06 |
| ● தனித்துவம் மிக்க பாலேஸ்வரி | 13 |
| ● உழைக்கும் மக்கள் தினம் | 21 |
| **சிறுகதை:** | |
| ● "முற்பகல் செய்யின்...." | 10 |
| ● நகைச்சுவைக் கதை குறும்புக்காரச் சிறுவன் | 32 |
| **கவிதை:** | |
| ● நாமும் நம் பண்பாடும் | 09 |
| ● முன்னேற்றம் | 09 |
| ● எவரால் முடியும்? | 14 |
| ● நல்லூர்க் கந்தா! | 35 |
| ● பற்றுறுதி கொண்ட கவிதை வரிகள் | 38 |
| **நூல் அறிமுகம்:** | 15 |
| **மாணவர் உலகம் :** | |
| ● மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் | 23 |
| **அறிந்தவையும் தெரிந்தவையும் :** | |
| ● லியனாடோ டாவின்சி | 19 |
| ● இன்றைய இளைஞர்கள் | 20 |
| **உங்கள் விருந்து :** | 26 |
| **நிகழ்வுகள் நினைவுகள்:** | |
| ● படிப்பகம் திறப்பு விழா | 27 |
| ● தமிழ்மொழியின் சிறப்பு விழா | 28 |
| ● பரதநாட்டிய அரங்கேற்றம் | 30 |
| **ஆரோக்கியம் :** | |
| ● புகைப்பிடிப்பதால் ஏற்படும் விளைவுகள் | 31 |
| **சினிமா :** | |
| ● தமிழ்த் திரைப்படங்களின் வகிபாகம் | 33 |
| **அறிந்ததைச் சொல்ல வந்தோம்:** | |
| ● துஷ்பிரயோகத்திற்கு வறுமையே காரணம் | 36 |
| ● எமது பிள்ளைகளின் எதிர்காலம் | 37 |
| **வாழ்த்துக்கள் :** | 39,40 |

அட்டையில் ....
அரங்கேற்றம் கண்ட செல்வி
இந்துஜா சிவதாஸின் நடனத் தோற்றம்

# பேனா முனையிலிருந்து .....

'சுத்தம் சுகம் தரும்', நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பவை எமது முதுமொழிகள். ஆனால் இன்று சுற்றுச்சூழல் பெரும் பாதிப்புக்குள்ளான நிலையில் தொற்றுநோய்கள் பரவி மக்களைப் பெரிதும் வாட்டுகின்றன. நுளம்புகளின் பெருக்கம் காரணமாக, டெங்குநோய் பரவுவதாகச் சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை செய்து வருகின்றனர். டெங்குக் காய்ச்சலின் உத்வேகத்தினால் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளமை வேதனை தரும் விடயம். கொழும்பு மாவட்டம் உட்பட மேலும் பல மாவட்டங்கள் டெங்கு நோய் பரவும் பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

இலங்கையில் சுமார் பதினொராயிரம் டெங்கு நோயாளர்கள் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். வயது வித்தியாசமின்றி இந்நோய் குழந்தைகள் தொடக்கம் பெரியவர்கள் வரை எல்லோரையும் தாக்கியுள்ளது. வைத்தியர்களும், தாதியர்களும் நோயின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளார்கள். கொழும்பு மாவட்டத்திலேயே கூடிய டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். மற்றும் இரத்தினபுரி, குருநாகல், திருகோணமலை, மாத்தறை, களுத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலும் இந்நோய் பரவி வருவதாக அறிய முடிகிறது.

நீர் தங்கி நிற்கும் தேக்கங்கள், கழிவுப்பொருட்கள் குவிந்து கிடக்கும் பகுதிகள் நுளம்புகள் பெருகும் இடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. நுளம்புப் பெருக்கத்தை முற்றாகக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கண்டறிய வேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வீடுகளையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் வடிகால்கள், கிடங்குகள், கால்வாய்கள், பீலிகள் போன்றவற்றில் நீர்தேங்கி நிற்காமல் வழிந்தோடக்கூடிய வழிமுறைகளை மேற்கொள்ளுவதாலும், கழிவுப் பொருட்கள் குவிந்து கிடக்காமல் அவற்றை உரிய முறையில் அப்புறப்படுத்துவதாலும் நுளம்பு உற்பத்தியைத் தடுக்க முடியும்.

பொதுமக்கள் மட்டுமன்றி, சுகாதாரப் பகுதியினர், அதிகாரிகள், அரச,தனியார் நிறுவனத் தலைவர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள், பொறுப்பான அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் எல்லோரும் இணைந்து நுளம்புகளை இல்லாதொழிக்க அக்கறையுடன் துரிதமாகச் செயற்படவேண்டும்.

டெங்கு நோயை இலங்கையிலிருந்து முற்றாக ஒழித்தே ஆகவேண்டும். மலேரியாவை இலங்கையிலிருந்து ஒழிக்க எண்பது வருடங்கள் எடுத்துள்ளது. அதுபோன்ற நிலை ஏற்படாமல் இருக்க டெங்கு நோய் ஒழிப்பில் உடனடியான கவனம் எட்டப்படவேண்டும். உயிர்களைக் காவுகொண்டு வருகின்ற டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பெறுமதி மிக்க உயிர்களைக் காப்பற்றியே ஆகவேண்டும். இந்த முக்கிய பணிக்கு நாட்டு மக்கள் எல்லோரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி எம் நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்போம்.

**மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.**

**- ஆசிரியர்.**

கட்டுரை

# தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களுக்கு வலுவூட்டிய பேராசிரியர் சு.வித்தியானந்தன்



காலனித்துவ ஆட்சிக் காலத்திலே தோற்றம்பெற்ற இன, மொழி, மதம் மற்றும் பண்பாடு தொடர்பான அடையாள நெருக்கடிகளுக்குத் தமது புலமை வலிமையால் முகம் கொடுத்து, தமிழ் அடையாளத்தைப் பல தளங்களிலும் பல நிலைகளிலும் நிறுவியவர் பேராசிரியர் வித்தியானந்தன்.

தமிழ்மொழியின் தளத்தையும் பலத்தையும் அகன்ற சமயப் பரப்புக்கு இட்டுச் சென்றமை அவர் மேற்கொண்ட பணிகளுள் விதந்து குறிப்பிடத்தக்கதொன்றாகும். "இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு", "கிறீஸ்தவர் தமிழ்த் தொண்டு" என்ற ஆய்வுகள் வழியாக தமிழின் பண்பாட்டுத் தளத்தை அகன்ற பெருந்தளத்துக்கு இட்டுச் சென்றார்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களது புலமை வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும் பன்முகமான பரிமாணங்களைக் கொண்டவை. அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:-

01.) பல்கலைக்கழகத்துக்கும் அடிநிலைச் சமூகத்துக்குமிடையே காணப்பட்ட எல்லைகளைத் தகர்த்தமை.

02.) தமிழ்த் தேசிய சிந்தனை வளர்ச்சிக்குரிய ஆய்வுப் பணிகளையும், எழுத்துப் பணிகளையும் பண்பாட்டு பணிகளையும் முன்னெடுத்தமை.

03.) உயர்நிலையான தமிழாய்வை மேற்கொண்டதுடன் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்தமை.

04.) காலனித்துவ பண்பாட்டுச் சூழலில் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருந்த நாட்டுக் கூத்துக்களை எழுகோலம் பெறச் செய்தமை.

05.) மறை நிலையிலிருந்த மரபுவழித் தமிழ் அறிஞர்களின் ஆளுமைகளையும் அவர் தம் எழுத்துக்களையும் மீட்டெடுத்தமை.

06.) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை வளமும் பொலிவுமுள்ள பல்கலைக்கழகமாக மாற்றியதோடு அதன் புலமைத் தரத்தை உச்சங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய வழிமுறைகளைக் கையாண்டமை.

07.) அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டு தமிழியல் ஆய்வில் உலக அறிஞர்களின் ஈடுபாட்டை ஊக்குவித்தமை.



08.) மரபு தொடர்பான கருத்திய

லில் இறுகிய பழமைவாதிகளுக்கும் முற்போக்கு எழுத்தாளர்களுக்கும் கருத்து முரண்பாடு மோதல் நிகழ்ந்த வேளை முற்போக்கு எழுத்தாளர்கள் முன் வைத்த பேச்சு, மொழி, அடிநிலை மக்களின் வாழ்வைப் புனையும் இலக்கியம் முதலாம் கருத்துக்களை ஆதாரங்களோடு வலியுறுத்தி நின்றமை.

*09.)* உயர்நிலையான ஆய்வுகளின் முடிவுகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லும் " அறிவின் உருபரவல்" (DIS SEMI -NATION OF KNOWLEDGE) செயற்பாட்டை மேற்கொண்டமை.

*10.)* தமிழியல் ஆய்வுப் பரம்பரை ஒன்றினை உருவாக்குவதற்குத் தளராது உழைத்தமை.

மரபுவழித் தமிழ்க் கல்வி, நவீன ஆங்கிலக் கல்வி என்ற இரு வழி ஊட்டங்களையும் பெற்றவர் பேராசிரியர் சு.வி. அவர்கள். *1924* ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் திகதி பிறந்த அவர் தமது தொடக்கக் கல்வியைத் தந்தையார் வழக்கறிஞர் சு.சுப்பிரமணியம் அவர்கள் நிறுவிய சைவப் பாடசாலையிலேயே ஆரம்பித்தார். தந்தையார் வீமன் காமத்தில் நிறுவிய அந்தப் பள்ளிக் கூடத்தில் பின்னை நாளில் அவர் முகாமையாளராக வும் கடமையாற்றியமை பிறிதொரு முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும்.

தொடர்ந்து தமது இடைநிலைக் கல்வியைச் சைவச் சூழலிலும், கிறீஸ்தவ சூழலிலும் பெற்றுக்கொண்டார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றில் அவரது இடைநிலைக் கல்வி தொடர்ந்தது. *1941* ஆம் ஆண்டு கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே சேர்ந்து தமிழைச் சிறப்புப் பாடமாகத் தெரிவு செய்து முதலாவது பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அவர் மேற்கொண்ட பாடத் தெரிவு காலனித்துவ ஆங்கிலச் சூழலில் புரட்சிகரமானதாக இருந்தது. அத்தகைய ஒரு தெரிவைத்தான் மலேசிய, ஆங்கிலச் சூழலில் இருந்து வந்த அவரின் மாணவர் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் மேற்கொண்டு தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றவர்.

இரு பேராசிரியர்களினதும் பன்மொழிப் புலமைத் தளம் அவர்களது ஆய்வுக்கு வலுவூட்டியது. இருவரும் தமிழ், ஆங்கிலம், இலத்தீன், வடமொழி ஆகியவற்றை ஆழ்ந்து கற்றிருந்தனர்.

தமது கலாநிதிப் பட்டப் படிப்புக்காக பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் *1948* ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். அங்கு புகழ் பூத்த ஆய்வாளர் அல்பிரட் மாஸ்டர் என்ற அறிஞரின் வழிகாட்டலில் ஆய்வைத் தொடர்ந்தார். "பத்துப்பாட்டு வரலாறு, சமூக இயல், மொழியியல் நோக்கு" என்ற தலைப்பில் அவரது ஆய்வு நிகழ்ந்தது. *1950* ஆம் ஆண்டில் அவர் கலாநிதிப் பட்டத்தைப் பெற்று வந்து பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இணைந்து கொண்டார்.

அவரது கலாநிதிப் பட்ட ஆய்வைத் தழுவி ஆக்கம் பெற்ற நூலாக "தமிழர் சால்பு" வெளிவந்தது. அந்நூல் பற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பியின் அவதானிப்பு வருமாறு: "அக்காலத்தைத் தமிழ் வாசகர்களின் முன்நிறுத்தும் அறிவியல் நிலை நின்ற ஆய்வுப் பணியினை இந்நூல் போல் வேறு எந்த ஒரு தனி நூலும் இதுவரை நிறைவேற்றியதில்லையென்பர்" *(2003)*.

நாட்டார் இலக்கியங்களையும் நாட்டுக் கூத்துக்களையும் மறையும் விளிம்பிலிருந்து மீட்டெடுத்த பேராசிரியர் சு.வித்தியானந்தனின் செயற்பாடு காலத்தால் அழியாத பதிவாகின்றது. அந்த வகையில் அவர் "மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்", "அலங்கார ரூபன் நாடகம்", "மன்னார் நாட்டுப் பாடல்கள்", "என்டிறீக்கு என்பதோர் நாட

கம்", "மூவிராசாக்கள் நாடகம்", "ஞான சவுந்தரி நாடகம்", "கஞ்சன் அம்மானை" முதலியவற்றை அச்சேற்றினார்.

தமிழ்ப் பண்பாட்டிலும் நாட்டாரியலி லும் அவருக்கிருந்த ஈடுபாடு நாட்டுக் கூத் துக்களை மீட்டுருவாக்கல் செய்யும் கலைச் செயற்பாடாக நீட்சி கொண்டது. "கர்ணன் போர்", இராவணேசன்", "நொண்டி நாடகம்", "வாலிவதை" முதலாம் நாட்டுக் கூத்துக் களை நவீன அரங்கியல் வீச்சுக்குள் கொண்டு வந்து எழுகோலம் செய்தார். அவ்வாறு எழுகோலப்படுத்துகையில் அவற்றின் ஆன்மா சிதைந்துவிடாது பார மரித்தமை அவரிடத்துக் காணப்பட்ட தெளிவான கலைக் கருத்தியலின் வெளிப் பாடு எனலாம். தமது திணிப்புக்களை அவற்றின் மீது மேற்கொள்ளாது, நாட்டார் அழகியற் கலைப் பெறுமானங்களை மிகுந்த அவதானத்துடன் பராமரித்துக்கொண்டார்.

நாட்டுக் கூத்துக்களின் மீட்டுருவாக்க லுடன் இணைந்த ஒரு முக்கியமான செயற் பாடு அண்ணாவிமாரதும், கூத்தாடுபவர் களதும் சமூக அந்தஸ்தினை நிமிர் நிலை யில் உயர்த்தியமையாகும். சமூகவியல் நோக்கில் அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

பேராசிரியர் சு.வித்தியானந்தனது எழுத் தாக்கங்கள் ஆழ்ந்து விரிந்து அகன்றவை. "இலக்கியத் தென்றல்", "தமிழர் சால்பு", "கலையும் பண்பும்", "தமிழியற் சிந்தனை கள்" முதலாம் அவரது நூல்கள் தமிழ்ப் பண்பாட்டை ஆய்வு நிலையில் அடையா ளப்படுத்துகின்றன.

செய்தி இதழ்களிலும், பருவ இதழ்களி லும் முந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரை களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி யுள்ளார். அவை அனைத்தும் ஆய்வு வழி எழுந்த கண்டுபிடிப்புக்களுடன் தொடர்பு டையவை.

நவீன இலக்கியத் திறனாய்வுகளில், எழுத்தாக்கங்கள் தொடர்பான புதியதொரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. அதா வது, நூல்களுக்கு எழுதப்படும் அணிந்து ரைகளும் முன்னுரைகளும் தனித்த ஓர் இலக்கிய வடிவமாக அடையாளப்படுத் தப்படுகின்றன. பேராசிரியரின் முன்னுரை கள் இலக்கியப் பெறுமானமும் அறிவியல் பெறுமானமும் இணைந்த இரு நிலைப் பரி மாணங்களைக் கொண்டுள்ளன. அவற் றைத் தொகுத்து வெளியிடும் முயற்சியை கலாநிதி கமலநாதன் அவர்களும், ஊடக வியலாளர் தெ.மதுசூதனன் அவர்களும் ஏற்கனவே மேற்கொண்டுள்ளனர். "வித்தி யின் இலக்கிய முன்னீடுகள்" என்ற தலைப்பில் சேமமடு பதிப்பகத்தின் வெளி யீடாக அது வெளிவந்துள்ளது.

பண்பாட்டுப் பேணுகையில் அவர் பல் கலைக்கழகத்தினருக்கு ஓர் "உரு மாதிரி கையாக" (Role Model) விளங்கினார். விழாக்கள் அனைத்திலும் அவர் தேசிய உடையுடன் கலந்துகொண்டார். யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலும் அவர் தேசிய உடையையே அணிந்தார். தமது மனைவி திருமதி கமலாதேவியுட னும், பிள்ளைகளுடனும் இணைந்து பண் பாட்டுப் பேணுகையைப் பலநிலைகளில் முன்னெடுத்து வந்தார். தமிழர்களின் செவ் வியல் அடையாளங்களுள் ஒன் றாகிய பரத நாட்டியத்தை தமது பெண் பிள்ளை களாகிய மகிழ்நங்கைக்கும், அன்புச்செல் விக்கும் வரன்முறையாகப் பயிற்றுவித்து அரங்கேற்றம் செய்து வைத்தார்.

அரசியலில் நேரடியாக ஈடுபட வில்லை. ஆனால் விடிவுக்கான பண்பாட்டு அரசிய லோடு அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண் டார். அவரது பேச்சுக்களும், எழுத்துக் களும், எதிர்ப்புக்களின் மத்தியிலே யாழ்ப் பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தியமையும் அவரின் பண்பாட்டு அர சியலை வெளிப்படுத்தின.

**-பேராசிரியர் சபா ஜெயராசா**

கட்டுரை

# மறைந்தும் மறையாத முற்போக்குச் செம்மல் அறிஞர் முகம்மது சமீம்



மார்க்ஸிசம் ஒரு மகோன்னத தத்துவம். அத்தத்துவத்தை தமது வாழ்நாள் முழுக்க ஏற்று அதன் வழிநின்று செயற்பட்ட ஓர் ஒப்பற்ற படைப்பாளியாக அறிஞர் முகம் மது சமீம் திகழ்ந்துள்ளார். பள்ளிப் பரு வத்தில் பயிலும் காலத்திலிருந்து மார்க்ஸிய சிந்தனையின் பால் ஈர்க்கப்பட்டு அவை சம்பந்தமான தமிழ், ஆங்கில நூல்களை எல்லாம் தேடிப் படித்தார். க.கைலாச பதியுடன் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்த வேளை இருவரும் நெருங்கிப் பழகி ஆத்ம நண்பர்களானார்கள். இருவரும் மார்க்ஸிய சித்தாந்தவாதிகள் என்ற அடிப் படையில் அவர்களின் நட்பு குடும்ப மட் டத்திலும் மேலோங்கியிருந்தது. இலக்கி யக் கூட்டங்கள், கருத்தரங்குகள், எழுத்தா ளர் மாநாடுகளிலும் இருவ ரும் இணைந்து பங்காற்றினார்கள். முற்போக்கு எழுத்தா ளர் சங்கத்தின் செயற் பாட்டில் இருவரின தும் பங்கு அளப்பரியது. பேராசிரியர் க.கைலாசபதி மறைந்த பின் அவர் வழி காட்டலில் வளர்ந்தவர்களில் சிலர் தமது சுயநலத்திற்காக திசைமாறிச் சென்ற போதும், அவரின் கொள்கை வழி நின்று செயற்பட்ட கொள்கைவாதியாக அறிஞர் முகம்மது சமீம் இருந்துள்ளார்.

வரலாற்றுத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற அ.முகம்மது சமீம் அவர்கள், அகமதுபுள்ளை - நாச்சியா உம்மா தம்பதி களுக்கு இரண்டாவது மகனாக பதுளை யில் பிறந்தார். ஆரம்ப காலத்திலேயே தமிழ்மொழியில் ஆர்வம் காட்டிய சமீம் அவர்கள் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றதுடன், தன்னுடைய மாணவப் பருவத்திலேயே பதுளை தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகச் செயற்பட்டு, பதுளையில் தமிழ் வளர்ப்பதற்குப் பெரும் பணியாற்றினார்.

நான்கு பாகங்களைக் கொண்ட **'ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்'** என்ற வரலாற்று - அரசியல் நூலை எழு திய சமீம் அவர்கள் கல்வி, கலாசாரம், இலக்கியம் போன்ற துறைகளிலும் நூல் களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார். **'விமர்சனக் கட்டுரைகள்'** என்ற இவரது மற்றுமொரு நூல் பன்முக ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டது. இவரது **'படைப்பாளிகளும் ஆய்வாளர் களும்'** என்ற நூல் இலங்கைக் கவிஞர் களையும், சிறுகதை ஆசிரியர்களையும், ஆய்வாளர்களையும் பற்றிய கட்டுரை களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவர் எழுதிய 'சிறுபான்மை சமூகத் தின் பிரச்சினைகள்' என்ற தொகுதிக்கு சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை

குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் விவகாரத் திணைக்களம் இவருக்கு 'அறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

தமிழ்நாட்டில் நடைபெற்ற உலக முஸ்லிம் மாநாட்டில் கலந்துகொண்ட இவர் அங்கும் கௌரவிக்கப்பட்டார். கலாசாரத் திணைக்களம் 'கலாபூஷணம்' விருது வழங்கியமையும் அவருக்குக் கிடைத்த கௌரவமாகும்.

சாந்த சுபாவம் கொண்ட இவர் எல்லோருடனும் அன்பாகப் பழகும் இயல்பினர். வரவேற்று உபசரிப்பதில் அவருக்கு நிகர் அவரே. திருக்குறள், சைவசித்தாந்தம், பாரதி பாடல்கள் ஆகிய நூல்களில் தமது புலமையை வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவர். நிறைய வாசிப்பதால் எல்லாத் துறைகளிலும் தனது ஆளுமையை வெளிக் காட்டுவார். இலக்கியம், வரலாறு, அரசியல் சார்ந்து அவர் உரையாடும்போது பல உதாரணங்களை எடுத்துச் சொல்லக் கூடிய மதிநுட்பம் வாய்ந்தவராகவும் இருந்துள்ளார். **'எனது இலக்கியத் தேடல்'** என்னும் கட்டுரை நூல் ஒன்றையும் இவர் எழுதியுள்ளார். தாம் படிக்கும் நூல்கள் பால் ஈர்க்கப்பட்டால் உடனே அந்நூல் பற்றிய தமது நோக்கைக் கட்டுரையாக வடித்து பத்திரிகைகளுக்கு அல்லது சஞ்சிகைகளுக்குத் தவறாது அனுப்பி வைத்துவிடுவார். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நேர்மையுடன் செயற்பட்ட ஒரு பெரு மனிதராக அறிஞர் அ.முகம்மது சமீம் வாழ்ந்துள்ளார்.

பேராசிரியர் க.கைலாசபதியின் 23 ஆவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட **'கைலாசபதி : தளமும் வளமும்'** என்னும் நூலில் அ.முகம்மது சமீம் அவர்கள் 'கைலாசபதியின் பார்வையில் கலை இலக்கியம்' என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். "கலையும் இலக்கியமும் அவை தோன்றிய காலத்திய சமுதாயத்தைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன என்பது மார்க்ஸிய சித்தாந்தம். கலையும் இலக்கியமும் காலத்தைப் புறக்கணித்து வாழ முடியாது. மார்க்ஸியக் கருத்துப்படி பழமை இலக்கியம், மதம், அறம் இவையெல்லாம் மேட்டுக் குடியினர் தமக்குச் சார்பாகத் தோற்றுவித்த தத்துவங்கள், மேல்தட்டில் உள்ளவர்களின் வாழ்க்கையை நிர்ணயிப்பதே அடிமட்டத்திலுள்ள மக்கள் உழைப்புத்தான். அடிமட்டத்திலுள்ள மக்களின் உற்பத்திச் சக்திகளும், உற்பத்தி உறவுகளும்தான் ஒரு சமூகத்தின் போக்கை நிர்ணயிக்கிறது" என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

இக்கட்டுரையில் பேராசிரியர் க.கைலாசபதி பற்றிக் குறிப்பிடும்போது.... "சங்க இலக்கியங்களை, மார்க்ஸிய கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து தனது முடிவுகளை தமிழுலகிற்கு வைத்ததில்தான் கைலாசபதியின் மேதா விலாசம் தெரிந்தது" என்றார்.

'படைப்பாளிகளும் ஆய்வாளர்களும்' என்ற நூலில் முகம்மது சமீம் அவர்கள் பின்வருமாறு தன்னுரையில் கூறியிருப்பது ஈண்டு கவனிக்கப்பாலது:- "வரலாற்றுத் துறையிலேயே மூழ்கிப் போயிருந்த நான் இலக்கியத்தில் ஈடுபாடு கொள்வதற்கு முக்கிய காரணமாயமைந்த என்னுடைய சர்வகலாசாலை நண்பன் கைலாசபதிக்கு நான் என்றும் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். என்னோடு சகமாணவனாகவும் நண்பனாகவும் இருந்த கா.சிவத்தம்பியையும் என்னால் மறக்க முடியாது. எனது ஆரம்ப கால மாணவப் பருவத்தில் எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர் ஆறுமுகராசா அவர்களையும், சாஹிராக் கல்லூரியில் தமிழ் கற்பித்து, தமிழில் ஆர்வம் ஏற்படுத்திய என்னுடைய ஆசானும் எனது பெருமதிப்புக்குரியவருமாகிய கமால்தீன் அவர்களையும் என்றென்றும் நினைவுகூறுகின்றேன்." - என்று குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் மெட்ரிகுலேசன் பரீட்சையில்

சித்தி அடைந்து 1951 இல் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் சேர்ந்து படித்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். 1953 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வரலாற்றுத் துறையில் இளங்கலைமாணி சிறப்புப் பட்டம் பெற்ற பின் சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையேற்றார். 1958 ஆம் ஆண்டு அக் கல்லூரியின் உபஅதிபர்களில் ஒருவராகப் பதவி உயர்வு பெற்றார். அக்காலப் பகுதியில் இலக்கியக் கட்டுரைகளையும், வரலாற்றுக் கட்டுரைகளையும் எழுதத் தொடங்கினார்.

டாக்டர் மு.வரதராசனைப் பற்றிய அவருடைய விமர்சனம் எல்லோராலும் பாராட்டப் பெற்றது. 1958 ஆம் ஆண்டு ஊவாக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் கலந்துகொண்ட சமீம் அவர்கள் பாரதியைப் பற்றியும் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

பதுளையிலும், பண்டாரவளையிலும் நடந்த கலை விழாக்களில், பெரும்பாக வித்தியாதரிசியாகச் சேவையாற்றிக் கொண்டிருந்த முகம்மது சமீம் அப்பிரதேச மக்களிடையே தமிழ் உணர்வை வளர்க்கப் பெரும் பங்களிப்பை வழங்கினார். 1968 ஆம் ஆண்டில் பதுளையில் நடந்த இலக்கிய விழாவில் பங்குபற்றிய பாரதியாரின் பேத்தியும், தமிழ்நாட்டு எழுத்தாளர் கு.அழகிரிசாமியும் வந்திருந்தனர். சமீம் அவர்கள் அவ்விழாவில் **'பாரதியும் ஷெல்லியும்'** என்ற தலைப்பில் சிறப்பான உரையொன்றை நிகழ்த்தினார். இந்த உரையைத் தொடர்ந்து பாரதி பற்றிப் பேச இருந்த கு.அழகிரிசாமி பாரதியைப் பற்றி இவ்வளவு தெரிந்து கொண்ட ஒரு சபையில் கூறுவது கூறல் பொருத்தமற்றது என்று எண்ணி தனது பேச்சின் தலைப்பை மாற்றி **'நாட்டுப் பாடல்கள்'** என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். சமீம் அவர்கள் பாரதியைப் பற்றிப் பேசுவதற்கு அவர் பெற்றிருந்த ஆழமான அறிவு மற்றவர்களுடைய கவனத்தை எந்தளவுக்கு ஈர்த்துள்ளது என்பதற்கு இந்நிகழ்வு ஒரு சான்றாகும்.

பல்கலைக்கழகத்துக்குள் இருந்து ஆற்றமுடியாத கல்வி, இலக்கியச் சேவைகளை வெளியிருந்து தன் ஆளுமையால் பலரும் மெச்சத்தக்க வகையில் மேற்கொண்ட அறிஞர் அ.முகம்மது சமீம் எம்மைவிட்டுப் பிரிந்தமை பேரிழப்பாகும். முற்போக்கு இலக்கிய உலகம் ஒரு முக்கியமானவரை இழந்து நிற்கிறது. விளம்பரத்தை விரும்பாது அமையாகவிருந்து இலக்கியப் பணியாற்றிய அந்த இலக்கியச் செம்மலின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும்.

**- தம்பு சிவா**

---

## என்றும் வாழும் பெரும் கலைஞர்



இலங்கையில் கலாசார, இலக்கிய மற்றும் உள்நாட்டு நாடகக் கலைக்கு பெரும் பங்காற்றிய பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரவின் நூறாவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் 'சரச்சந்திர பதனம்' அமைப்பினருக்கு 'தாயக ஒலி' தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. என்றும் மறக்கமுடியாத பெருமைக்குரியவராக அவர் கலைஞர்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டே இருப்பார். 'மனமே' அவரை மறக்க வைக்காது.

கவிதை

# நாமும் நம் பண்பாடும்



தாயகத்தை நெஞ்சிருத்தி வாழு கின்ற
தீந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த செல்வங் காள்நீர்
போயுற்ற தேசமெல்லாம் மண்சி றக்கப்
பாடுபட்டு உழைக்கின்றீர் புகழுங் கொண்டீர்
நேயமுடன் அந்நாட்டு மக்க ளோடு
நட்புறவு கொண்டுந்தான் வாழு கின்றீர்
தாயகத்தை மறக்காதே உங்கள் எச்சந்
தம்மினையும் நெஞ்சிருத்த வகைசெய் யுங்கள்

மொழியொன்றே அதற்கு வழி தமிழைக் கற்றால்
மொழியோடு கலாசாரம் ஒன்றி வாழும்
தொழில் பெறஅந் நாட்டுமொழி தவிர்க்க
வொண்ணா
சொந்தமொழி பண்பாட்டைக் காக்கும் காப்பு
அழகிதாம் எங்கள்மொழி அமுதம் ஒக்கும்
ஆன்றோர்கள் செம்மொழியாய் ஒப்பி யுள்ளார்
விளைநிலமாம் பிள்ளை நெஞ்சம் வித்தாய்
ஊன்றின்
வாழும்எங்கள் வாழ்வுநெறி தொடரும் ஓர்வீர்

பன்னூறு ஆண்டுதொன்மை கொண்ட தெங்கள்
பண்பாடு கலாசாரம் பிறிதை விஞ்சும்
கண்போன்று காத்தாரெம் முன்னோர் நாமும்
காப்பதுதான் என்றாலும் நம்பின் னோர்கள்
அன்னியரின் பொருந்தாத நாக ரீக
அவலத்துள் மூழ்கிவிடின் சுயமிழப்பார்
கண்ணியரே கருத்திலிதைக் கொள்வீர் காலம்
கடந்தபின்னே வருந்துவதில் பயனொன் றில்லை

-ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

## "முன்னேற்றம்"

வாழ வழியற்று நிதம்
வறுமைப் பேயுள் சிக்கி
கோழைகளாய் நின்று மனம்
குமுறியே அழுவோரின்
தோளோடு தோளிணைத்து
தொட்டிழுத்து முன்னேற்றி
வாழ வகை பண்ணுங்கள்
வளருமிதால் முன்னேற்றம்

போட்டி பொறமைகளால்
புலர்ந்திடா நம் பொழுது - துயர்
ஒட்டும் வழியமைப் போமிங்கு
ஓங்கட்டும் உண்மையுணர்வு - எமை
வாட்டி வதைக்கின்ற கொடும்
வறுமைப் பேய் ஒழிய - ஏர்
ஓட்டி விதைத்தறுப் போம்
உயரட்டும் நம் தேசம்.

சுவடிக் களிப்புற்று நன்றாய்க்
குலவி மகிழ்ந்து
ஆடிப் பாடி யென்றும்
அருங் கலைகள் பயின்று
தேடித் தொழில் செய்து
தீச் செயல்கள் ஒழித்து
வாடிக் கிடப்போர்க் கீந்து
வாழ்வதாம் முன்னேற்றம்.

இறால்குழி
சி.சிவரஞ்சினி

சிறுகதை

# "முற்பகல் செய்யின்...."



இணுவை சுசீலா (தமிழ்நாடு)

அன்று பகல் 12 மணி 30 க்கு இலங்கை வானொலி மரண அறிவித்தல் நிகழ்ச்சியில் ......... முதலாவது அறிவித்தலைக் கேட்ட நான் திடுக்குற்றேன்.

அட எங்கடை சின்னம்மா ஆச்சி செத்துப் போச்சுது பாவம்.

"இஞ்சருங்கோ, சின்னம்மா ஆச்சி செத்துப் போச்செண்டு றேடியோவிலை சொல்லுது......" இவரிடம் சொல்லிவிட்டுத் துடிப்போடு நின்றேன். "மனுசி இனி இருந்துதான் என்ன செய்யப் போகுது? சும்மா மேளிட்டையும், பேரப்பிள்ளைகளிட்டையும் வசைச்சொல்லுகளைக் கேளாமல், வருத்தத்திலை கிடந்து சீரழியாமல் போகட்டும், போய்ச் சேரட்டும்"

என் கணவரிடமிருந்து வந்த வார்த்தைகள் இவை.

செத்த வீட்டுக்கும் போகமுடியாது. வேளைக்குத் தெரிந்திருந்தால் இவரையாவது அனுப்பியிருக்கலாம்.

பரவாயில்லை உயிரோடிருக்கையிக்கை மனுசியை நான் திருப்திப்படுத்தியிருக்கிறன். மனுசியும் என்னிலை நல்ல அன்பாய் இருந்தது.

* * *

கடந்த காலத்து நிகழ்வுகள் மனதில் ஊசலாடுகின்றன........

"தேவி மேனை தேவி....." வேலிப் பொட்டுக்குள் இருந்து ஆச்சி கூப்பிடும் குரல் கேட்குது....

"தங்கச்சி! சின்னம்மா ஆச்சி கூப்பிடுது ஏனென்டு போய்க் கேள்" அம்மா சொல்ல, சமைத்துக் கொண்டிருந்த நான் போகிறேன்.

"ஏனெணை ஆச்சி கூப்பிட்டனீங்கள்?"

"மேனை, அக்கா றோட்டடிக்குப் போய் வந்திட்டுதே?"

"ஓமெணை ஏன்?"

"இல்லை போனால் எனக்கு மீன் வாங்குவிப்பம் எண்டு யோசிச்சன். சரி வேறையொண்டுமில்லை" ஆச்சி திரும்பிப் போகுது.

அவவை நினைக்க ஒருபக்கம் பாவமாகவும், மறுபக்கம் கோபமாகவும் வருகிது. பிள்ளைகளைப் பெற்று என்ன பிரயோசனம்? ஆச்சிக்கு ஒரு மகனும், ஒரு மகளும்தான். பென்சன் வருகுது. மகன் நல்ல உத்தியோகம், மகளையும் சொந்தத்துக்கைதான் கட்டிக் கொடுத்தது. மருமகனும் என்ஜினியர், இருந்தும் என்ன? மனிசிக்கு வயது போயிட்டுது. இருத்திப் போட்டுச் சாப்பாடு செய்து வடிவாகக் கொடுத்தால் என்ன?.... ஆச்சி மட்டும் என்ன? பென்சன் காசோடை, சொத்துப் பத்து வீடு, வளவு எண்டு ஒரு குறையுமில்லை. மகளுக்குச் சீதனம் கொடுத்திட்டுத் தனக்கும் பிடி வைத்திருக்குது. மகன் வெளியூரிலை வேலை பார்க்கிறார். தனக்கு மருமகளோடை போயிருக்க ஒத்து வராது என்று சொல்லுவா. இஞ்சை மகள் அடிக்கடி ஏதும் நொட்டை சொன்னபடி.

போதாக்குறைக்கு மருமகனுக்கு மாமி யாரை கண்ணிலையும் காட்டேலாது.

"ஒருக்கா ஆறுதலாகப் படுப்பம், இருப்பம் எண்டால் அந்தாள் ஏதும் புறு புறுக்கும்! ஆக்கினை வேண்டாமெண்டு தான், பிறிம்பா ஒரு கொட்டில் கட்டுவிச்ச னான். இப்ப ஒரு கரைச்சலுமில்லை, விரும்பின நேரம் நான் விரும்பிய மாதிரி என்னவும் செய்யலாம். சாப்பாடு மட்டும் மேள் அனுப்புவ. அதுவும் கிழமையிலை அரிசி வாங்கிக் கொடுக்கிறனான்." எங் கடை வீட்டை வாற நேரமெல்லாம் ஆச்சி இப்படிச் சொல்லும்.

'நல்ல தாய் .... நல்ல மகள்' என்று என் மனம் நினைக்கும்.

மகன் எப்பவேன் வந்து தாயைப் பார்த் திட்டுப் போவர். அவர் போன பிறகு ஆச்சி யின்ரை மேள் பொன்மணியக்காவின் குரல் கேட்கும்.

"அவருக்கென்ன .... வருவார் போவார். போகேக்கை எல்லாத்தையும் வாங்கிச் சுருட்டிக் கொண்டு போய்விடுவார். இஞ்சை நானும் பிள்ளையளும்தான் அவ வுக்கு அடிமை வேலை செய்யவேணும், சுடுதண்ணி வைக்க, குளிக்க வாக்க, சீலை தோய்க்க' சாப்பாடு போட ..... இதுக் குத்தான் நாங்கள்."

இன்னும் என்னென்ன வெல்லாமோ கேட்கும். பேரப்பிள்ளைகளும் தாயோடை சேர்ந்து ஒத்துப் பாடுவினம்.

"மனுசி தன்ரை பென்சன் காசு, வரும் படிகள் இதையெல்லாம் மேனிட்டைக் கொடுக்குதெண்டு தான் மேளுக்குக் கோவம், அதுதான் இப்படிப் பொரிஞ்சு தள்ளுறாள்." என்று அம்மா சொல்லுவா.

அன்று நான் சமையல் முடிச்சுக் கொண்டு சாப்பிடப் போனபோது..... சின் னம்மா ஆச்சி மீன் வாங்க வேண்டு மெண்டு சொன்னது நினைவுக்கு வந்தது. ஒருபாத்திரத்தில் சோறு போட்டு, மீன் குழம்பும், பொரியலும் வைத்து மகனிடம் கொடுத்தனுப்புகிறேன்.

இது மேளுக்குத் தெரிந்தால் ஏதும் சொல்லுவ எண்டு தெரியும். சொல்லட்டுமன்.

அடுத்த நாள் - மீண்டும் ஆச்சியின் குரல் வேலிப் பொட்டருகில் கேட்கிறது. போய் என்னவென்று கேட்கிறன். முதல் நாள் சோறு கொடுத்த பாத்திரம், அதோடை நல்லதும் அழுகல் உள்ளது மாய் ஐந்தாறு மாம்பழங்கள். நாலைந்து பனங்கிழங்கு'

"இந்தா இதை உன்ரை பிள்ளையளிட் டைக் குடு".

நான் அனுப்பிய சோற்றுக்கு நன்றியறி வித்தல் இது. என மனதுக்குள் நினைத்துக் கொள்கிறேன். என்ன இருந்தாலும் ஆச்சிக்கு மற்றவையிட்டை அடிமைப்படக்கூடா தென்ட எண்ணமும் இருக்கு.

எனக்கு அதை வாங்க விருப்பமில்லை யெண்டாலும், மறுக்க மனமில்லாமல் வாங்கிக் கொள்கிறேன். எங்கடை பிள்ளை யளும் இதைத் தின்னாது. சரி, இவள் கூட்ட வாற மகேஸ்வரியிட்டைக் குடுப்பம். அவளுக்கும் பெரிய புழுகமாய் இருக்கும். ஆச்சியும் மேளுக்குத் தெரியாமல்தான் இதைக் கொண்டு வந்ததெண்டும் எங்க ளுக்குத் தெரியும்.

இந்தச் சின்னம்மா ஆச்சியையும், மகள் பொன்மணியக்காவையும் பற்றி யோசித் துப் பார்க்கிறேன். தாயும் பிள்ளையும்தான் ..... ஆனால் எத்தகைய அபூர்வப் பிறவி கள்? என் அம்மாவைப் பற்றிச் சிந்திக் கிறேன். அம்மா எங்களிடம் காட்டும் பிள்ளைகள் என்ற வாஞ்சையும், நாங்கள் அவவிடம் வைத்திருக்கும் அன்பும், மதிப்பும் எங்கே.....? இந்தப் பிறவிகள் எங்கே? மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான். எல்லாத்துக்கும் கொடுப் பினை வேணும்.

ஒருநாள் ஆச்சியிட்டைக் கேட்டன் "ஏனெனை நீங்கள் ஏதும் காசு வைச்

சிருந்தால் மேளிட்டைக் குடுங்கோவன். அப்ப அவை வடிவாகப் பார்ப்பினம் தானே?" எண்டு.

"மேனை உங்களைப் போல எண்டு நினைச்சிட்டியே அவளை? எல்லாம் வாங்குவள். ஆனால் எனக்கேதும் செய்யிற தெண்டால் நொடிக்கொரு நொட்டை சொல்லுவள். என்ரை மேள்தான்... நான் சொல் லுறனெண்டு பறைஞ்சு போடாதை" என்றா.

ஆச்சியும் முந்திக் கண்டபடி ஒருவரிடமும் கைநீட்டி ஒண்டும் வாங்காது. ஆனால் உடம்பு ஏலாத பிறகு அடிக்கடி வேலியடியில் வந்து கூப்பிடும். என்னுடைய மகனுக்கு வயது போனவர்களிலை ஒரு விருப்பம். அவன் போய் ஆச்சியிட்டைத் தடியை வாங்கிக் கொண்டு கையிலை பிடித்துக் கூட்டிக் கொண்டு வருவான்.

ஆச்சியும் வரயிக்கை அவனுக்கு இனிப்பு, ரொபி எண்டு கொண்டு வந்து கொடுக்கும். ஏதும் சாப்பிடச் சொல்லிக் கேட்டால் மறுக்கும். தெண்டித்தால், "இஞ்சை தா" எண்டு வாங்கி மடியிக்கை கட்டிக் கொண்டு, "வீட்டிலை கொண்டு போய்ச் சாப் பிடுறன்" எண்டு சொல்லும். சிலவேளை அவவை நினைத்தால் பாவமாக இருக்கும்.

இவ்வளவு ஏலாத பிறகும் ஆச்சி சும்மா இராது. இருந்து, இருந்து வளவுக்குள் இருக்கும் குப்பைகளைக் கூட்டிக் குவிக்கும். விறகு, மட்டைகளைப் பொறுக்கி அடுக்கும். எல்லாம் வித்துக் காசாக்கிற எண்ணம். "ஏனெணை சும்மா கிடந்தெழும்பாமல் இப்படி அடியன் அடிச்சு ஆருக்குக் கோட்டை கட்டப் போறியள்?"

"மனம் கேக்குதில்லை மேனை, அவளவையளும் கவனிக்கிறாளவயில்லை." எண்டு சொல்லும்.

✸ ✸ ✸

வேலை காரணமாக நாங்கள் வேறு ஊருக்கு மாற்றலாகி வந்துவிட்டம். அதன் பின் சின்னம்மா ஆச்சிக்கு வருத்தம் வந்தும், படுக்கையாகிப் போனதும். பார்க்கப் போகிறவையைக் கண்டு அவ அழுததும் மற்றவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறம்.

✸ ✸ ✸

இருபது வருடங்கள் கழித்து மீண்டும் ஊரிலேயே வந்து குடியேறியிருக்கின்றோம். ....

சின்னம்மா ஆச்சி வீட்டில்... அவ இருந்த அதே கொட்டிலில், அரையில் சீலையும், மேலே ஒரு சட்டையும், கையிலை தடியுடன் உற்று நோக்குகிறேன். அவவைப் போல...... அட... ஆர் அது...? அவவின்ரை மகள் பொன்மணியக்கா தான்.

"தங்கச்சி! கொஞ்சம் சுடுதண்ணி வைச்சுத் தாறியே மேனை. குளிக்க வேணும்" மகளிடம் கேட்கிறா.

"போங்கோ! உங்களாலை பெரிய தொல்லை. ஒரு நிமிஷம் சும்மா இருக்க விடமாட்டியளே. எந்நேரமும் ஆக்கினை. சும்மா கிடந்து குளறாதையுங்கோ. இண்டைக்கு ஒருநாள் குளியாட்டி என்ன குடி முழுகிப் போகுமே....?" இன்னும் என்னென்னவோ வார்த்தைகள். அவவின் மகள் நந்தினியின் குரல் ஒலிக்கிறது.

செருப்பால் அடித்தது போல் இருக்கின்றது. "தெய்வம் நின்றறுக்கும்" என என் வாய் முணுமுணுக்கிறது.

சின்னம்மா ஆச்சியும் தன்ரை தாய்க்கு இப்படித்தான் செய்திருப்பாவோ....?

வியப்பிலிருந்து நான் விடுபட முன், "அம்மா! இந்தாங்கோ தேத்தண்ணி! இதைக் குடிச்சிட்டு பாத் ரூமிலை, சுடுதண்ணி கலந்து வைச்சிருக்கு, குளிச்சிட்டு வாங்கோ..." என்னுடைய மகள் நிர்மலா குரல் கொடுக்கிறாள்.

"நான் என்ரை அம்மாவுக்குத் துரோகம் செய்யேல்லை" என நினைத்தபடியே குளிக்கச் செல்கின்றேன். ●

கட்டுரை

# எழுத்துலகில் தனித்துவம் மிக்க பாலேஸ்வரி



ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் தனித்துவமான ஒரு எழுத்தாளராகத் தன்னை முன்னிலைப்படுத்தி எழுத்துக்களை பேச வைத்தவர் பாலேஸ்வரி அவர்கள். சிறு கதைகள் மூலம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட எழுத்தாளர் பாலேஸ்வரி அவர்கள் நாவல் இலக்கியத்துறையில் தடம் பதித்து பன்னிரண்டு நாவல்களைத் தந்துள்ளார். காதல், சமூக ஏற்றத்தாழ்வுகள், பெண்ணுரிமை, ஆன்மீகம், சாத்வீகம் ஆகிய அம்சங்களை முன்னிறுத்தி தமது படைப்புக்களை மென்மையான போக்கில் உலாவரச்செய்தவர்.

திருகோணமலையைத் தாயகமாகக் கொண்ட பாலேஸ்வரி அவர்கள் தமிழர் பண்பாடு, கலாசாரம், ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றை முன்னிலைப்படுத்தி தமது படைப்புக்களைப் பதிய வைத்தவர். ஈழத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய பெண் எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டிருந்த காலகட்டத்தில் கிழக்கின் ஒளிவிளக்காகத் தோன்றி எழுத்துலகைத் தம் எழுத்துக்களால் கட்டி வைத்தவர் என்று சொன்னால் மிகையாகாது. அறுபதுகளுக்குப் பின் இவரின் நாவல் இலக்கியப் பங்களிப்பு மிக கனதியானதாக இருந்துள்ளது. இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகள் இவரின் எழுத்துக்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்து தொடர்ந்து எழுத்துப் பணிக்கு உரமிட்டிருந்தன.

வீரகேசரி நாளிதழில் தொடர்கதையாக வெளிவந்து பலரின் பாராட்டுக்களைப் பெற்ற இவரின் முதல் நாவல் **'சுடர்விளக்கு'** *1966* ஆம் ஆண்டு திருகோணமலை தமிழ் எழுத்தாளர் சங்கத்தினால் வெளியிடப் பெற்றது. அதைத் தொடர்ந்து **'பூஜைக்கு வந்த மலர்'** *(1972)*, **'உறவுக்கு அப்பால்'** *(1975)*, **'கோவும் கோயிலும்** *(1980)*, **'உள்ளக் கோயில்'** *(1983)*, **'பிராயச்சித்தம்'** *(1984)*, **உள்ளத்தினுள்ளே'** *(1990)*, **'மாது என்னை மன்னித்துவிடு'** *(1992)*, **தத்தைவிடு தூது** *(1993)*, **'எங்கே நீயோ நானும் அங்கே'** *(1993)*, **'அகிலா உனக்காக'** *(2002)*, **'நினைவு நீங்காத'** *(2003)* ஆகிய இவரது பன்னிரண்டு நாவல்கள் வெளி வந்து இலக்கியத் துறைக்கு ஒரு அர்த்தப் பாட்டை உணர்த்தி நின்றன.

ஒரு ஆசிரியராக இருந்து கொண்டு, தாம் பெற்ற சூழல் அனுபவங்களை முன்நிறுத்தி, அந்த மண்ணின் வாழ் மக்களை நேசித்தவர் என்ற வகையில் பெண்மையின் மென்மையான உணர்வுகளை உறவுப் பிரிவுகளை, குடும்பப் பூசல்களை, மன அமைதியின்மையை, உளக்குமுறல்களை சாத்வீகமான அணுகுமுறையில் கதைகளாகச் சொல்லி வந்தார். தாம் படைத்த கதாபாத்திரங்களை நல்ல குணம் மிக்கவர்களாகக் காட்ட முற்பட்ட போதிலும், ஒரு சிலரை சூழ்நிலைக் கைதிகள் என்ற நிலைக்கு அப்பால் விட அவர் மனம் இடங்கொடுக்கவில்லை. இவற்றை அவரின் நாவல்களை வாசிப்பவர்கள் புரிந்து கொள்வார்கள்.

இத்தகைய பெருமைக்குரிய இவர் பல சந்தர்ப்பங்களில் 'சிறுகதை' போட்டிகளின் நடுவராகப் பணியாற்றி நேர்மையான முறையில் தமது தீர்ப்புகளை வழங்கி பலரின் மரியாதைக்குரியவராகத் தம்மை முன்னிலைப் படுத்திக் கொண்டார். புத்தக வெளியீடுகள் பல கண்ட இவர், பல படைப்புகளுக்கு அணிந்துரை வழங்கியது மல்லாமல் நூல் ஆய்வுகள் பல செய்துள்ளமை அவரின் ஆற்றல் மிகு புலைமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன. அழகு தமிழில் பேசக் கூடிய ஆற்றல் பெற்றவராகத் திகழ்ந்த இவர் இலக்கியக் கருத்தரங்குகளில் தமது ஆளுமையை வெளிக்காட்டியுள்ளார்.

சிறுகதை, கட்டுரை, நாவல், விமர்சனம் ஆகிய இலக்கியத் துறைசார்ந்த விடயப் பரப்பில் ஆத்ம திருப்தி கொண்டு எழுதி வந்த ஒரு மூத்த பெண் படைப்பாளி இன்று நம்மிடையே இல்லை. இருந்த போதிலும் அவர் நாமம் என்றும் நிலைத்து நிற்கும். ●

**-திருமலை பாலா இலண்டன்**

கவிதை

# எவரால் முடியும்?



## தாஸிம் அகமது

விரிந்த வானும், வெளியும் எங்கும்
விளையும் பயிர்கள் யாவும், இந்தச்
சரிந்தே ஓடும் நதிகள் பலவும்
சங்கமிக்க விழையுங் கடலும்,
உரிந்தே இருளின் போர்வை தன்னை
ஓட வைக்கும் வெய்யோன் கதிரும்,
எரிந்தே எழும்பும் தீயின் சுடரும்
எவராற் சமைக்க முடியும் ! முடியும் !

அழகின் ஒளியும் அதனினமைப்பும்
அறிவிற் பெருகும் ஆழ நினைப்பும்
சுழலும் காற்றின் வேகச் சுமையும்
சுளையாயிருக்கும் பலவின் சுவையும்
இளமை முதுமை இவைகளனைத்தும்
இதயத் துடிப்பின் விருப்பு வெறுப்பும்
மழையும், இடியும், மின்னல் வெட்டும்
மனிதன் எவனால் அமைக்க முடியும்.

கண்ணின் காந்தப் பார்வை தானும்
கடலில் உருண்டு புரளும் அலையும்
பெண்ணின் அழகைக் காட்டும்
அமைப்பும்
பிசகில்லாத இயற்கை வனப்பும்
மண்ணும், மதியும், மனதைக் கவரும்
மற்றும் உள்ள பொருட்கள் யாவும்
இன்னும் பலவாம் இயற்கை வளமும்
எவராற் சமைக்க முடியும் முடியும்?

எறும்பின் வாழ்வும் இணையில்லாத
எழிலார் மலரின் தேனைச் சுவைக்கும்
சுரும்பின் வாழ்வும், வானிலிருந்து
சுற்றுகின்ற கோள்கள் யாவும்
கரும்பின் சுவையும், கசப்பில்லாத
காதலுணர்வை மனிதனிடத்தில்
விரும்பும் வண்ணம் அமைப்பதற்கு
வேறு எவரால் முடியும் முடியும்?

சிந்தனை செய்வாய்

இயற்கை வளங்களை
இமைப் பொழுதழிக்கும் மனிதனே
உயிருடன் இயங்கும் ஒன்றின்
மயிரினைப் படைக்க உன்னால்
முடியுமா?


**'தாயக ஒலி' சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஒரு வருடச் சந்தா | - | ரூபா 900 (அஞ்சல் செலவுடன்) |
| வெளிநாடு | - | $ 30 (U.S), £15 (U.K) |

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச்
சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

**தொடர்பு :**

த.சிவசுப்பிரமணியம்
9-2/1, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு - 06.
இலங்கை
தொ.இல. 071 8676482

சி.சரவணபவன்
காரைக்கால் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.
தொ.இல.077 3126802

வங்கிக் கணக்கு விவரம்:
வங்கி/Bank : Commercial Bank - Wellawatte
A/C No: 8100086490

# நூல் அறிமுகம்

**தேடலோன்**



தமிழ் மக்களின் அரிய பெரும் சொத்தாக விளங்குவது கல்வியாகும். 'பெற்றோர்களே! பிள்ளைளே!!' என்று விழித்து கலாநிதி தி.கமலநாதன் அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் சமூகத்திற்கு மட்டுமன்றி முழுநாட்டுக்கும் பயன் தரும் வகையில் அளப்பரிய மேன்மையை வழங்கக்கூடியது. இந்நூலாசிரியரின் அனுபவச் செறிவை இந்நூலின் ஒவ்வொரு வாக்கியத்திலும் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. கல்விப் புல உன்னதங்களை இந்நூல் வாயிலாகத் தெரிந்துகொள்ளும் பெற்றோர்கள் அவற்றைத் தமது பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறி அவர்களுக்கு வழிகாட்டுவதன் மூலம் அவர்களை சிறப்புமிகு கல்விமான்களாக உருவாக்க முடியும். கல்வி பற்றியும் அவற்றை வழங்கும் பாடசாலைகள் பற்றியும் நல்லாசிரியப் பெருந்தகைகள் பற்றியும் தமது அனுபவப் பரவலால் முன்வைத்துள்ளார். நவீன கல்வி உலகில் மகிழ்ச்சிகரமாக கற்றல் செயற்பாடுகள் எத்தகைய முறையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதை விளக்கியுள்ளார். கல்வியில் நம்பிக்கையும் அதன் மூலம் வாழ்க்கையில் பெருமை மிகு முன்னேற்றத்தையும் பிள்ளைகள் அடைவதற்கு வரப்பிரசாதமாக இந்நூலின் வருகை அமைந்திருக்கிறது.

● ● ●



ஆற்றல்மிகு அனுபவப் புருசர் சுகநலக் கல்வியாளர் கலா பூஷணம் கா.வைத்தீஸ்வரன் அவர்கள் 'குறைந்த செலவில் நிறை உணவு' என்னும் நூலை மக்கள் நலன் கருதி வெளிக்கொணர்ந்துள் ளார். பொதுவாக இந்நாட்டுச் சூழலில் இயற்கையாகப் பெறக்கூடிய மூல உணவுப் பொருள்களிலிருந்தும் நிறைவான போசனை பெறக் கூடிய அறிவியல் ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைவாக ஆங்காங்கே அதற்குரிய அட்டவணைகள் சேர்க்கப் பட்டு, குழந்தைகள், மூத்தோர், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார், வளரிளம்பருவத்தினருக்குரிய போசனைத் தேவைகளைக் கருத்திற்கொண்டு அவற்றுக்குரிய உணவு வகைகள் நம் மூதாதையரினால் காலம் காலமாகப் பாவிக்கப் பட்டு பயனடைந்த உணவு முறைகளை மீண்டும் உட்கொள்வதன் மூலம் ஆரோக்கிய வாழ்வுக்கு வித்திட்டவர்களாவோம். இந்நூல் அறிவுசார் பாரம்பரிய உணவுகளை மீண்டும் எமது தினசரி உணவுப் பழக்கத்தினை கொண்டுவரத் தூண்டுகோலாக அமையும் என்பதை உறுதியாக நம்பலாம்.

● ● ●



1970 களில் வெளிவந்த கற்பகம் சஞ்சிகையில் கவிதைகள் எழுதி அறிமுகமான ஷெல்லிதாசன் அவர்கள் 44 வருடகால நீட்சியின் காரணமாக பார்போற்றும் கவிஞராக முகிழ்து நிற்கின்றார். இந்நூலிலுள்ள கவிதைகள் மிகவும் தரம்மிக்கவையாகவும் சமுதாயக் கண்ணோட்டம் மிக்கவையாகவும் அமைந்திருக் கின்றன. இவரது கவிதைகள் அவரின் படிமுறையான வளர்ச்சியை பிரதிபலிப்பனவாக அமைந்திருப்பது சிறப்பு. மிகவும் இலாவகமான

மொழிநடையில் எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கவிதைகளை யாத்துள்ள கவிஞர் ஷெல்லிதாசன் தமது உள்ளக் கிடக்கைகளையும் பதிவுசெய்துள்ளார். மார்க்சிய சிந்தனையில் சமத்துவ உலகையும் பெண்ணியச் சிந்தனையையும் கொடுமைகளுக்கு எதிரான குரலையும் நவீன கண்டுபிடிப்புக்களின் சீரழிவுகளையும் இளைய தலைமுறை எழுத்தாளர்களின் அனுபவ தரிசனத்தையும் இந்நூலிலுள்ள கவிதைகள், எடுத்தியம்புகின்றன. ஜீவநதி வெளியீடாக வெளிவந்திருக்கும் 'நகர வீதிகளில் நதிப்பிரவாகம்' எனும் கவிதை நூல் புதுக்கவிதையின் பூப்பந்தலாகும். ஆற்றல் மிக்க கவிஞரை தாயக ஒலி பாராட்டி மகிழ்கின்றது.

● ● ●




தமிழர், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி வாழ்ந்த பலரின் வாழ்வுமுறையை வெளிக்கொண்டுவரும் முதல் முயற்சியே இந்நூலென நூலாசிரியர் பீர் முகம்மது அவர்கள் குறிப்பிடுகின்றார். தான் பின்பற்றும் ஒரு மதத்தில் இருந்து கொண்டே ஏனைய மதங்களை மதிக்க வேண்டும் என்ற விபுலானந் தரின் நெறிமுறையை இந்நூல் படம் பிடித்துக்காட்டுகின்றது. இனங்களுக்கிடையிலான நல்லுறவின் தேவையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. நமது தேசத்தின் இன்றைய தேவையையும் இதுதான் என்பதை மக்களும் சமூக சேவை நிறுவனங்களும் இந்நூலை வாசிப்பதன் மூலம் புரிந்துகொள்ளமுடியும். வேதாந்த தத்துவத்தை ஏற்றுக்கொண்ட விபுலானந்த அடிகளார் அனைத்தையும் சமமாகக் கண்டார். அதனால் அவர் எழுத்துக்களில், வாழ்வில், சமூக, சமய, சாதி இனக் குரோதங்கள் வரவில்லை. அவர் இந்து மதத்தில் ஊன்றினாராயின் அவரது கரங்களும் சிரசும் அதனைக் கடந்து பரந்தன. விபுலானந்த அடிகளாரை மையமாகக் கொண்டு பண்டைய முஸ்லிம் - தமிழ் உறவினை அரசியல் பண்பாட்டுத் தளங்களில் இந்நூலைக் கொண்டுவர முயன்றுள்ளார் நூலாசிரியர். மிகப் பயனுள்ள முயற்சி.

● ● ●




சமூக, கல்வி,கலை, இலக்கிய சஞ்சிகை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினரால் காலவரையறைக்குள் உட்படாது வெளிவந்துகொண்டிருக்கிறது. தமிழ் மணி அகளங்கன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் 'மாருதம்' பல்வகை துறை சார் பரிமாணங்களுடன் மடை விரித்துக்கொண்டிருக்கிறது. எமது பார்வைக்குக் கிடைத்த 14 ஆவது இதழில் சிறுவர் நாடகம், சிற்றிலக்கியங்கள், கவிதைகள், மொழிப்பெயர்ப்புக் கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் என்று பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. 'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்' பற்றிய கட்டுரையைத் தமிழ்மணி அகளங்கன் தந்துள்ளார். தமிழகத்தில் இருந்து வரும் 'தீரா நதியும், இணுவிலிலிருந்து வரும் 'தாயக ஒலி'யும் அட் டைப்பட அம்சங்களைத் தந்து நிற்கின்றன. குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய 'சூடக் கொடுத்த சுடர்கொடி' என்னும் குறுநாடகமும் 'கலைவளர்ச்சி குறைவாகத்தானிருக்கிறது' என்று கூறும் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் பேட்டியும் இந்த இதழை அலங்கரிக்கின்றன. மொத்தத்தில் தரமான வேறுபட்ட இலக்கிய அம்சங்களைத் தாங்கி மாருதம் மலர்ந்துள்ளது. தொடரட்டும்.

**தாயக மைந்தன்.**



பண்பாடு என்பது பன்மை நிலை கொண்டது. பண்பாட்டின் ஒவ்வொரு கூறும் சமூக நிலையிலேயே தனக்குரிய பாத்திரத்தை நிறைவேற்றிய வண்ணமிருக்கும். அவற்றின் ஒன்றிணைந்த தொழிற்பாடுகளையும் இயங்கும் களங்களையும் தான் வாழ்ந்து அனுபவித்து வரும் முகிழ்ப்பரப்பிலிருந்து அறிகை வடிவம் கொடுக்கும் முயற்சியை இந்நூலாசிரியர் உடப்பூர் வீரசொக்கன் முன்னெடுத்துள்ளார். அவரிடத்தே காணப்படும் இதழியல் சார்பு தொடர் பாடல் புலக்காட்சி நூலில் பரவலோடு ஒன்றித்து நிற்கின்றது. மரபு வழியான ஒரு கிராமத்தின் ஒரு பொருண்மிய வாழ்வும் அதனோடு இணைந்து நிற்கும் விழுமியங்களும் நூல்களும் நூல்வழியாக எழுகோலம் கொள்கின்றன. தமது தனித்துவங்களை தாமே நேசிக்கும் கிராமிய பண்பாட்டைக் கண்டறிவதற்குரிய அழைப்பு விடுத்தலும் இந்நூலிலே நிறைந்துள்ள பிறிதொரு பரிமாணமாகின்றது. கிராமத்துக்காட்சிகளை மட்டுமன்றி கிராமிய உள்ளடக்கத்தையும் நூல் செறிவுபடுத்தி நிற்கின்றது.

– பேராசிரியர் சபா ஜெயராசா.

● ● ●



இளம் வயதிலேயே அனுபவம்மிக்க எழுத்தாளராகத் தம்மை முன்னிலைப்படுத்தி தொடர்ந்து எழுதிவரும் தியத்தலாவ எச்.எவ். ரிஸ்னா தாம் படித்த கவிதை, சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் போன்ற நூல்களை விமர்சனப் பார்வையில் நோக்கித் தமது மனப் பதிவுகளை கட்டுரையாக வரைந்துள்ளார். அவை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. அவற்றையெல்லாம் தொகுத்து கொடகே புத்தக நிறுவனத்தார் நூலாக வெளிக் கொணர்ந்துள்ளனர். பிரபல திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரன் இந்நூலுக்குக் கனதியான அணிந்துரையை வழங்கியுள்ளார். 40 நூல்களின் விமர்சனப் பார்வை நூல்வாயிலாகத் தெரிகின்றது. 'எழுதுவது ஒரு தவம்' என்று சொல்லுவார்கள். அத்தவத்துடன் கூடிய தேடலும் வாசிப்பும் நூலாசிரியரின் அறிவுசார் பண்பாக முகிழ்ந்து நிற்பதை அவதானிக்க முடிகின்றது. மூத்த எழுத்தாளர்கள் பலரின் நூல்களை வாசித்து தெளிந்து தமது மனப்பதிவுகளை விமர்சனமாக முன்வைத்த தியத்தலாவ எச்.எவ்.ரிஸ்னா அவர்கள் பாராட்டுக்குரியவர். மானிடத்தின் விடிவு நோக்கிய பாதையிலே பயணிக்கும் தமிழ் இலக்கியம் முற்போக்குச் சிந்தனையுடன் முகிழ்ந்து நின்று வரலாறு படைக்கும் காலகட்டத்தில் எழுதியவர்களின் படைப்புக்களை விமர்சன நோக்கில் உற்றுணர்ந்து செயலாக்கம் தந்த ரிஸ்னா அவர்களைத் 'தாயக ஒலி' வாழ்த்தி நிற்கின்றது.

● ● ●



திருகோணமலை மாவட்டத்திலேயே உலக மக்களைக் கவர்ந்தி ழுக்கும் சிறப்பான கடற்கரையைக் கொண்ட இடமாகவும் விவசாயம் மற்றும் உப்பு உற்பத்தியும் நடைபெறும் இடமாகவும் அமைந்த நிலாவெளி ஒரு தமிழ்க்கிராமம். அச்சிறப்பு மிகு அக்கிராமத்திலே அகவை நூறு கண்டு மூத்த குடிமகனாக வாழ்ந்துகொண்டிருக்கும் 'பெரியார்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் உயர்திரு க.ஜெகரெத்தினம் அவர்கள் 'நிலாவெளி வரலாறும் பண்பாடும்' என்னும் நூலைத்

தந்துள்ளார். நிலாவெளியூரின் வரலாற்றுத் தொன்மைகளையும் அங்கு வாழ்கின்ற பெருமை வாய்ந்த மக்களின் சிறப்பியல்புகளையும் மண்ணின் பண்பாடு, கலாசார வளங்கள் என்பவற்றுடன் பல்வேறு வணக்கத் தலங்களினதும் வரலாற்று விழுமியங் களையும் மற்றும் பல்வேறு பட்ட விடயங்களையும் உள்ளடக்கி இந்நூல் வெளி வந்துள்ளது. குளக்கோட்ட மன்னன் கட்டிய திருக்கோணஸ்வர ஆலயம் நலாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும், இக்காலத்திலேயே நிலாவெளியில் வாழ்ந்த மக்கள் கோணேசர் ஆலயத்தில் தொண்டுகள் செய்தனர் எனவும் திருக்கோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு என்னும் நூல்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய தொன்மையான ஒரு கிராமத்தின் வரலாற்றையும் இந்நூல் செப்பி நிற்கின்றது.

# நரேந்திர மோடி கேட்டார் மக்கள் கொடுத்தார்கள்



உத்தரப் பிரதேச மாநிலம் பரேலியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி கலந்து கொண்டு, மக்களைப் பார்த்து “வலிமையான, நிலையான அரசு அமைக்க 300க்கு மேற்பட்ட தொகுதிகளில் எங்களுக்கு வெற்றியைத் தாருங்கள்.”

“நாடு அழிவதை யாரும் வேடிக்கை பார்க்க முடியாது. 300 க்கு மேற்பட்ட எம்.பிக்கள் ஆதரவுடன் பிரதமர் இருந்தால் தான் அவர் சொல்வதை உலகம் கேட்கும். வாக்காளர்களுக்கு அளித்த வாக்குறுதி களையும் நிறைவேற்ற முடியும்.”

“காங்கிரஸ் கட்சி ஆட்சியில் விவசாயிகள், இராணுவ வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டைக் காக்கும் இராணுவ வீரர்களுக்கே பாதுகாப்பு இல்லை. விவசாயிகள் தங்களது எதிர்காலம் பாதுகாப்பற்றது என்று கருதி தற்கொலை செய்து கொண்டுள்ளனர். எனவே இவற்றை யெல்லாம் போக்கி, உங்களுக்கு சேவை செய்ய இந்தச் சேவகனுக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள். பாரதீய ஜனதாவுக்கு ஓட்டுப் போடுங்கள்” மோடி கேட்டார் மக்கள் கொடுத்தனர்.

**இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடிக்கு ‘தாயகஒலி’ தனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறது.**

“குஜ்ராத்தில் முதலமைச்சராகப் பதவியேற்ற மோடி – நர்மதை அணைத் திட்டத்தைச் செயல்படுத்தியது, குஜராத்தை தொழில்கள் மிகுதி மாநிலமாக உருவாக்கியது, விவசாயிகளின் நிலங்களுக்கு சாகுபடி செய்வதற்கான நீரை வழங்கியது, தடையில்லா மின்சாரம், கல்வி வளர்ச்சி, பொது விநியோக முறையைச் சீராகச் செயல்படுத்தியது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியது என குஜராத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

அத்தகைய பாராட்டுக்குரிய மோடியே பிரமராக வேண்டும். அவ்வாறு அவர் வந்தால் நிச்சயம் இந்தி யாவை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வார்” என்று மகாராஷ்டிர மாநிலம் ஷேவ்காவ்னில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அத்வானி வேண்டுகோள் விடுத்தார். அவரின் வேண்டுகோளை மக்கள் ஏற்றுக்கொண்டு மோடியைப் பிரதமராக்கியுள்ளனர்.

# அறிந்தவையும் தெரிந்தவையும்

## லியனாடோ டாவின்சி




உலகம் வியந்து போற்றும் மோனலிசா ஓவியத்தை வரைந்த லியனாடோ டாவின்சி 1452 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி இத்தாலியில் பிறந்தார். வழக்கறிஞராக இருந்த இவரது தந்தை செல்வச் செழிப்புடன் வாழ்ந்தார். லியனாடோ டாவின்சி தனது பதின்நான்காவது வயதிலேயே மாதிரி வடிவமைப்பில் (MODELLING) மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவரது ஆர்வத்தை அறிந்து கொண்ட தந்தையார், புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் ஆந்திரயா டெல் வெரே சியோ என்பவரிடம் பயிற்சி பெற அனுப்பினார். அப்பயிற்சியே டாவின்சியை தனித்துவம் மிக்க ஓவியராக்கியது.

அவர் ஓவியராக மட்டுமல்ல, பொறியியலாளர், சிற்பி, உடற்கூற்றியல் அறிஞர், கட்டட வியல் நிபுணர், நகரமைப்பு வல்லுநர், புல்லாங்குழல் மேதை போன்ற பல்துறைப் பரிமாணங்கள் கொண்டவராக, பேரறிஞராக இருந்துள்ளார்.

உலகப் புகழ்பெற்ற மோனாலிசா போன்ற ஓவியங்களை வரைந்த போதிலும் அதில் மட்டும் திருப்தி காணாத டாவின்சி மனிதர்களின் உடலமைப்பை நுட்பமாக அறிந்து கொண்டால்தான் துல்லியமான ஓவியங்களை வரையமுடியும் என நம்பினார். அதனால் மனித உடல் உறுப்புக்களைப் பற்றி உலகம் தெரிந்திராத பல தகவல்களை கோட்டு ஓவியங்களாக நிலை நிறுத்தினார்.

அறிவியலையும் கணிதத்தையும் படிக்கும் காலத்தில் பயின்றிராத இவர், ஓவியம் மற்றும் சிற்பக் கலை வழியே அவற்றின் நுட்பங்களைத் தெரிந்து கொண்டார். பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதை ஆராய்ந்த இவர், மனிதன் பறவை போலப் பறக்க வேண்டும் என்பதற்காக அதற்குரிய கருவியை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் படங்களை வரைந்து விளக்கினார்.



இப்போதைய பரா கிளைடிங் இறக்கை போல இருக்கும் அக்கருவி, விமானத்தின் உருவாக்கத்திற்கு முன்னோடியாக இருப்பது என்பது தெளிவு. இன்றைய ஹெலிகொப்டர் போன்ற வடிவமைப்பில் ஒரு கருவியை வரைந்து அதற்கு 'ஆகாயத் துளைப்பான்' என்று பெயரும் இட்டிருக்கிறார். பறக்கும் கருவிகள் மட்டுமன்றி, டாங்கிகள் போன்ற யுத்தக் கருவி, பல திசைகளிலும் சுடக்கூடிய இயந்திரத் துப்பாக்கி என பல் வேறுப்பட்ட பொறியியல் அதிசயங்களை 15 ஆம் நூற்றாண்டிலேயே முன் வைத்துச் சென்றுள்ளார் அறிஞர் லியனாடோ டாவின்சி. அவர் நினைத்தவை நிரூபணம் பெற்றுள்ளன.

# இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்

**இளைஞர், யுவதிகளின் கரங்களிலேயே உள்ள உலகின் எதிர்காலம் சிறந்ததாக அமைய வேண்டுமானால் அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படவேண்டும். அவர்களின் தேவைகள் குறித்து ஆரோக்கியமான அணுகுமுறையும் அவசியம். கல்வி, சுகாதாரம், வீடு, தொழில்நுட்பம், வேலை வாய்ப்புக் குறித்த அவர்களின் முக்கிய அம் சங்கள் தகுந்த முறையில் பேணப்படும் போதுதான் அவர்களின் எதிர்காலம் ஒளிமய மாக இருக்கும்.**

"தற்போதைய நிலையில் இளைஞர், யுவதிகள் தீர்மானங்களை எடுப்பவர்களாக இருக்க வேண்டும். அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் இளைஞர்களைப் பங்கெடுக்க வைக்கவேண்டும்." என்று இலங்கையில் நடைபெற்ற உலக இளைஞர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைத் தலைவர் ஜோன் வில்லியம் எஷ் தெளிவுபடுத்தியுள்ளார். "அபிவிருத்தி அடைந்து வருகின்ற மற்றும் வறிய நாடுகளிலும் இன்று வறுமை தாண்டவமாடுகின்றது. எனவே வறுமை ஒழிப்பதை நோக்காகக் கொண்டு இளைஞர்கள் செயற்படவேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள் ளார். அந்த வகையில் உலகின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதிலும், எதிர்கால சமூகத்தை வளப்படுத்துவதிலும் இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதனை உணரமுடிகின்றது. எனவே உலகத் தலைவர்களும், கொள்கை வகுப்பாளர்களும், தீர்மானம் எடுப்பவர்களும் இளைஞர், யுவதிகளின் கருத்துக்களுக்கும், அவர்களின் யோசனைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டிது அவசியமாகும். மேலும் இளைஞர் யுவதிகளின் புத்தாக்க சிந்தனைகள் ஊக்குவிக்கப்படவேண்டும்.

இளைஞர்களின் எண்ணக் கருக்களைத் தட்டிக் கழிப்பது மூத்த தலைமுறையினரால் விடப்படும் தவறாகும். இளைஞர்களின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, சமூகங்களும் குழுக்களும் செயற்படவேண்டும். கொள்கைகள் வகுக்கப்படும்போது இளைஞர்களின் விருப்பங்களை கருத்திற் கொண்டு அவற்றினை அமுல்படுத்த முனைய வேண்டும். இளைஞர்களுக்கு எவ்வாறான திறமை இருக்கின்றதோ அவர்களை அவ்வழி யில் செயற்பட ஆதரவு நல்க வேண்டும்.


வேறுபட்ட குடியியல் சார்ந்த குழுக்களைக் கொண்டிருக்கும் இளைஞர்களின் சிந்த னைகளும் பங்களிப்பும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் உள்வாங்கப்பட வேண்டி யவை என்பதும் முக்கியமானதாகும். தேசிய மற்றும் சர்வதேச மட்ட தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் இளைஞர், யுவதிகளைப் பங்குகொள்ள வைக்க வேண்டியது முக்கிய தேவையாகும். அவர்களே நாளைய தலைவர்களாக பரிணமிக்கவிருக்கின்றார்கள் என் பதை நாம் எச்சந்தர்ப்பத்திலும் மறந்திருக்கக்கூடாது.

# Easan & CO

*Chartered Management Accountants*

Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017



செல்வராஜா கோல்டு ஹவுஸ் இன் 12 ஆவது
ஆண்டு நிறைவை முன்னிட்டு அனைவருக்கும்
எங்களது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்!
செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
£ 2000 மேல் நகைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு
£100 பெறுமதியான Gift Vovucher Free
£1000 மேல் புடவை கொள்வனவு செய்பவர்களுக்கு
£200 பெறுமதியான Gift Vovucher உம்
முற்றிலும் இலவசம்!
£ 100 மேல் புடவை கொள்வனவு
செய்பவர்களுக்கு
நகைகள் அனைத்தும் £ 259 மட்டுமே!
1 Ruby
2 Pearl
3 Yellow Sapphire
5 Diamond
6 Emerald
7 Cat's Eye
8 Blue Sapphire
9 Coral
Terms & Conditions apply
Selvarajah
Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees
162, Mitcham Road
London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269
Raveendran (Raja)
Director
செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
SELVARAJA
Gold House & Textiles
Exclusive Designer Jewellery
Sarees & all other Dresses
162B, Mitcham Road, London SW17 9NJ
Tel : 0208 7673 795, Mobile : 07825005269
raja72@hotmail.co.uk - www.sgfashion.co.uk

21 வருட கால அனுபவம்

# Linga & Co

**Legal Advisors & Immigration Specialists**

## We Specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

**V.P.Lingajothy**
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285

Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**


HENSHOU ISSHINRYU KARATE ACADEMY
59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF
Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com
AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA
DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP
*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)
*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs–male and female).
*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA
தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது
OUR BRANCHES:
EASTHAM, MANOR PARK, NEWBURY PARK
WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM
CROYDON, MITCHAM, BRISTOL, HARROW
SOUTHEND, SWINDON
CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN (6th DAN BLACK BELT)
TEL : 020 8518 3288
MOB : 07950 346 432
Email : info@henshou.com Web : www.henshou.com

## எழுத்தாளர் அறிமுகம்



உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி மதிப்பீட்டாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின் தற்போது கண்டியில் கணக்கியலாளராகவும் வரி ஆலோசகராகவும் பணியாற்றி வரும் தவபாலன் ஓர் அரசியல் விஞ்ஞான பட்ட தாரியுமாவார். எழுத்துத் துறையில் கால் பதித்து இலக்கிய சஞ்சிகைகளில் சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய ஆக்கங்களை எழுதி வரும் திரு.கா.தவபாலன் தற்போது 'தாயக ஒலி' இதழுக்குப் புதிதாக அறிமுகமாகி உள்ளார். அவரைத் 'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கிறது. – ஆசிரியர்.

# உழைக்கும் மக்களின் உரிமைத் தினம்

உழைக்கும் மக்களின் உரிமைக்க உரத்துக் குரல் கொடுக்கும் தினம் மேதினமாகும். மே தினத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் அமெரிக்க நாட்டின் சிக்காகோ நகரத் தொழிலா ளர்கள் ஆவர். முதலாளிமார் ஒரு நாளைக்கு எட்டு மணித்தியாலத்திற்கு மேல் தொழிலாளர் களிடம் வேலை வாங்கக்கூடாது என்ற கோரிக் கையை முன்வைத்து, அவர்கள் நடத்திய போராட் டத்தின் வெற்றியை வருடாவருடம் மே மாதம் முதலாம் திகதியில் மேதினமென்ற பெயரில் கொண்டாடும் வழக்கம் உருவாயிற்று.

இலங்கையைப் பொறுத்தவரை அடிமை முறைக்குச் சற்றும் குறைவில்லா விதத்தில் தலித் அடக்குமுறை காணப்படுகின்றது. முன்னைய கால கட்டங்களில் தலித் தொழிலாளர்களின் பிள் ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை. இந்த அடிப்படையில் தான் தலித் தொழிலாளர்களின் சமூகமானது கல்வி கற்காத பாமர சமூகமாகக் கட்டியெழுப்பப் பட்டது. வெள்ளைக்காரன் காலத்தில் அரச உத்தி யோகங்களை வகிப்பதற்கென்று முதலியார், உடையார் பரம்பரை உருவாக்கப்பட்டது. நாளடை வில் இவர்களே உயர்ந்த சாதியாகவும் கருதப்பட் டார்கள். அரச உத்தியோகங்கள் இவர்களுக்கே வழங்கப்பட்டன. ஏனைய மக்கள் தத்தம் பரம்பரை தொழில்களுக்கப்பால் ஓர் அடி கூட நகர அனு மதிக்கப்படவில்லை.

அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் கள் தத்தம் குலத் தொழில்களைச் செய்ய நிர்ப்பந் திக்கப்பட்டார்களே தவிர, பல்கலைக்கழகங்களின் பக்கமோ, அரச காரியாலயங்களின் பக்கமோ எட்டிப் பார்க்கக்கூட அனுமதிக்கப்பட வில்லை. உரிமைப் போராட்டங்களின் காரணமாக தலித் தொழிலாளர் களின் வாழ்வில் இன்று எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்ட போதிலும் பொதுவாகப் பார்க்கும் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஒட்டு மொத்த தொழிலாளர், விவசாயிகள் யுத்தப் பாதிப் பில் இருந்து விடுபட முடியாமலும், வானளாவ உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை காரணமாகவும் கஷ்டப்படுவதை இவ்விடத்தில் கூறியே ஆக வேண்டும்.

அடுத்து மலையகத் தோட்டத் தொழிலாளர் களின் தற்போதைய நிலை என்னவென்று சற்று ஆராய்வோம். வெள்ளைக்காரர்கள் இந்தியாவில் இருந்து தமிழ்த் தொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வந்தபோது மலையகம் விஷ ஐந்துக் களும், கொடிய மிருகங்களும் வாழும் காடாக இருந்தது. இவ்வாறு தமிழ்த் தொழிலாளர்கள் காடு களுக்கூடாகப் பிரயாணம் மேற்கொண்ட போது பல்லாயிரக்கணக்கானவர்கள் மலேரியா போன்ற நோய்களாலும், கொடிய மிருகங்களின் தாக்குதல் களாலும் இறந்து போயினர். காடுகளை அழிக்கும் வேலைகளின் போதும் எண் கணக்கற்ற மக்கள் இறந்து அழிந்து போயினர். இவ்வாறு இந்திய வம்சாவழித் தமிழ்த் தொழிலாளர்கள் தமது இன் னுயிர்களைத் தியாகம் செய்து தான் தேயிலை,

றப்பர், கோப்பித்தோட்டங்களை இலங்கையில் உரு வாக்கினார்கள். இந்தத் தோட்டங்களே இலங் கைக்கு பொன்னையும், பொருளையும் வாரி வழங் கின. ஆயினும் இவர்களின் உழைப்பு முதலாளி மாரால் பாரதூரமாகச் சுரண் டப்பட்ட அதேவேளை தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே வழங்கப்பட்டது. அதாவது இன்றைய நாட்களில் இலங்கையின் எப்பாகத்திலேனும் 1000 ரூபாவுக்கு குறைந்த கூலிக்கு கூலியாட் களைப் பிடிக்க முடியாது. இந்த உதாரணத்தில் இருந்து மலையகத் தொழிலாளர்கள் எந்த அள வுக்கு சுரண்டப்படுகிறார்கள் என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

மலையகத் தொழிலாளர்களின் சமூகம் ஒரு கல்வி கற்ற சமூகம் அல்ல. பட்டணங்களில் வெவ் வேறு தொழில்களைச் செய்யும் இந்திய வம்சா வழி மக்கள் ஓரளவு படித்து முன்னேறியுள்ளார் கள் என்று எடுத்துக் கொண்டாலும் தோட்டத் தொழி லாளர்களின் பிள்ளைகளுக்கு இன்றும் கூட கல் வியும், அரச உத்தியோகமும் எட்டாக்கனி யாகவே காணப்படுகின்றன. தோட்டக் கம்பனிகளின் உடைமையாக விளங்கும் லயன் காம்பராக்களே தொழிலாளர்களின் வாசஸ்தலங்கள் ஆகும். ஒரு குடும்பத்தில் பத்துப் பேர் இருந்தாலும் ஒரு லயன் அறையில்தான் அவர்கள் வாழ வேண்டும். இவ் வாறு பார்க்கும்போது தோட்டத் தொழிலாளர் களின் வீட்டுப் பிரச்சினை எவ்வாறு உள்ளது என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்த் தொழிலாளர் சமூகம் மட்டுமல்ல, இலங்கை முழுவதிலும் வாழும் சிங்கள, முஸ்லிம் தொழிலாளர் சமூகங்கள் கூட வீட்டுப் பிரச்சினை போன்ற பிரச்சினைகளால் அல்லாடிக் கொண்டி ருப்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

அபிவிருத்தியென்பது அடக்கப்பட்ட மக்க ளான தொழிலாளர், விவசாயிகளைச் சென்றடை யாவிட்டால் அந்த அபிவிருத்தியால் பயனேதும் விளையப் போவதில்லை. பணக்காரர்களை, மென்மேலும் பணக்காரர்களாகவும், ஏழைத் தொழிலாளர்களை மென்மேலும் ஏழைகளாக வும் மாறும் நிலைமையினை மாற்றியமைக்க தொழிலாளர்கள் ஒன்றுபட்டு சபதமொன்றை எடுத் துக் கொள்வோமாக.!

கா.தவபாலன் ( பேராதனை )

---

# எப்பவோ முடிந்த காரியம்

**-சிவயோக சுவாமிகள்**



உலக காரியங்களால் கவரப்படாமலும், எச்சந்தர்ப்பத்திலும், சூழலிலும் உட லாலும், உள்ளத்தாலும் பாதிப்படையாமலும், கண்களால் பார்ப்பது அனைத்தும் உடல் உட்பட தற்காலிகமானவை என்றும் உலக மேடையிலே புதினங்கள் ஒன்றும் இல்லையென்றும் அனைத்தும் ஏதோ ஒருவகையிலே தீர்மானிக்கப்பட்ட காட்சி களே காண்பிக்கப்படுகின்றன என்பதைத் தெளிவாக உணர்ந்து பரபரப்பல்லாத வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்வதற்கு இம்மகா வாக்கியம் ஆதாரமாக இருக்கின்றது. நாம் தினந்தோறும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி இன்னும் வேறு தகவல் சாதனங்கள் ஊடாக, எண்ணற்ற தகவல்களைப் பெறுகின்றோம். இவற்றில் வேதனையைத் தரும் தகவல்கள் அநேகம். இவற்றால் கலவரப்படவோ, கவரப்படவோ ஆகாது. எது எது நடக்க வேண்டுமோ அவை அந்த நேரத்தில் நடக்கவே செய்யும். 'எப்பவோ' என்ற சொல் அநாதித் தன்மையையும் 'முடிந்த' என்பது மாற்றமில்லாத நியதியையும், 'காரியங்கள்' உலக விவகாரங்களையும் குறிப்பிடுகின்றன. கணம் தோறும் தோறும் ஒரு ஒழுங்கான முறையிலேதான் தோன்றி மறைகின்றன. இவ்வாறாக 'எப்பவோ முடிந்த காரியம்' மறைந்து நிற்கும் சக்தியால் தூண்டப்படலாம். அதற்கு நாம் செய்யும் நல்வினை, தீவினைகளின் பலனும் ஆதாரமாக இருப்பதும் உண்மையே.

மாணவர் உலகம்

**'இனுவில் ஒலி' நடத்திய கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் மூன்றாம் பரிசு பெற்ற கட்டுரை**

# இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்

மாண் என்பது மாட்சிமையினைக் குறிக்கும். மாணவர் என்பது பெருமைக்குரியவர் என்று பொருள். மொட்டு மலர்ந்து, காய் கனி போன்ற தொடர் நிகழ்வு குழந்தைப் பருவம், இளமைப் பருவம், போன்று சான்றோர் மானிடப் பருவங்களையும் குடும்பப் பருவம், முதுமைப் பருவம் என வகைப்படுத்தியுள்ளனர். இளமைப் பருவத் திலிருந்து மாணவர்கள் எனும் நாமத்தை கல்வி கற்பதன் மூலம் சூட்டிக் கொள்கின்றனர். இது வாழ்க்கையின் ஆரம்பமாகும்.

குடும்பப் பருவம் வளமை பெற்று சிறப்புடன் திகழவும் முதுமைப் பருவத்தை அஞ்சாது எதிர்கொள்ளவும் உறுதுணையாவது இளமைப் பருவத்தில் மாணவர்களாகிய நாம் பெறும் கல்வியாகும். இதனிடையே நாம் பலவகையான சவால்களை எதிர்நோக்குகின்றோம். மாணவர் பெருமையானது அறிவுப் பெருமை, ஆற்றல் பெருமை, நல்ல மனப் பாங்குப் பெருமை என்ற பூரண மனிதனுக்கான பண்பைக் கொண்டது. ஆளுமையின் கூறுகளாக உடல்மாட்சி, உரைமாட்சி, உளமாட்சி என்பன விளங்குகின்றன. இவ்வாறான மாணவர்கள் பலவகையான சவால்களை எதிர்நோக்குகின்றனர். இதனை நாம் எடுத்து நோக்குவோம்.

இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சாவல்களுக்கு காரணமாக நண்பர்கள், கைத்தொலைபேசி, தொலைக்காட்சி, சினிமா, வீட்டிலுள்ள பிரச்சினைகள், இணையம், பரீட்சை முறைகள் என்பன காணப்படுகின்றன. இவ்வாறான பல சாவல்களை வெற்றி கொள்வதும் அல்லது சவால்களை எதிர்நோக்க முடியாமல் தவறான வழியில் போவதும் மாணவர்களின் அறிவுத் திறனிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொரு மாணவர்களிடத்தும் அவர்களின் புறச் சூழல் காரணமாக அவர்களின் தனித்துவமான எண்ணங்களின் அடிப்படையிலும் சவால்களை எதிர் கொள்ளும் விதம் வேறுபட்டதாக அமையலாம். சில மாணவர்கள் சவால்களை வெற்றி கொள்வதும் உண்டு. சிலர் உடனே துவண்டு போவதும் உண்டு. மாணவர்கள் அறிவுத் திறமையை பெற்றுக்கொள்வதிலும் பலவகைப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இதனையே நன்னூல்,

> **"அன்னம் ஆவே மண்ணொடு கிளியே**
> **இல்கிக்குடம் ஆடு எருமையின்**
> **நெய்யே**
> **அன்னர் தலை இடை கடை மாணாக்கர்"**

என வகைப்படுத்துகின்றது. இது மட்டுமல்லாமல் அவர்களின் ஆளுமைத் திறன் என்பனவும் இச்சவால்களை எதிர் கொள்வதற்கான பெரும் பங்கினை வகிக்கின்றது.

மாணவர்கள் கற்கும் கல்வியே மாணவர்களுக்கான முதற்சவாலாக அமைகின்றது. போட்டிப் பரீட்சை என்பது மன அழுத்தங்களுக்கு உட்படுத்துகின்றது. சிலர் தங்கள் பிள்ளைகள் விரைவிலேயே ஒருதுறை

யில் மிகச் சிறந்து விளங்க வேண்டுமென ஆசைப்படுகிறார்கள். அந்த ஆசையால் அவர்கள் பிள்ளைகளை அதன் இயல்புக்கும், சக்திக்கும், உடல்வள வளர்ச்சிக்கும் அப்பாற்பட்ட காரியங்களைச் செய்யத் தூண்டுகிறார்கள். அப்படிச் செய்ய முயன்ற குழந்தை தளர்ச்சியடைகின்றது. தனது முயற்சி கைகூடாது போவதால் தாழ்வுணர்ச்சியடைகின்றது. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாதது போன்று பின்னரும் அத்துறையில் ஈடுபட மறுக்கின்றது. ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பாடங்களை அழுத்தத்தால் தெரிவு செய்து தோல்வியடையும் மாணவர் நிலையே இன்று காணப்படுகின்றது. இது மாணவர்களுக்கு பெரும் சவாலாய் அமைகின்றது. அத்தோடு மேலதிகக் கற்றலுக்காக மாணவர்கள் ரியூட்டறிகள் என்பவற்றிற்கு செல்கின்றனர். இவை மாணவர்கள் பரீட்சையில் வெற்றி பெறும் நோக்கத்திலேயே அமைந்துள்ளன. அவர்கள் தயார்படுத்தி விடும் கேள்விகள் பரீட்சையில் வராவிட்டால் பெறுபேறு பூச்சியமே. ரியூட்டரிகள் மாணவர்களுக்கு வாழ்க்கைக் கல்விமுறையினை வழங்குவதில்லை. இவையும் மாணவர்களின் சவால்களாகவே காணப்படுகின்றன.

இன்றைய நவீன உலகில் வளர்ச்சியடைந்து காணப்படும் தொலைக்காட்சிகள், தொலைபேசிகள், சினிமா, இணையத் தளங்கள் என்பனவும் மாணவர்களுக்கு சவாலாய் அமைகின்றன. இவை எல்லாமே எமது சமூகத்தையும், மாணவர்களையும் தீய எண்ணங்களினதும் செயல்களினதும் முழுவடிவங்களாக்கிவிடும் நிலை காணப்படுகின்றது. இதன் பெறுபேறு மாணவர்களின் வாழ்க்கைப் பரீட்சையில் தோல்வியை ஏற்படுத்துகின்றது. பருவ ஆசைகள் மிருகங்களை விட மோசமான காட்சிகளை நகரங்களில் குடை நிழலில் காட்சிப்படுத்துகின்றன. இப்பயன்பாடுகள் எம் சமூகத்தையும் மாணவர்களையும் மனித விழுமியங்களற்ற புது உலகத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கின்றன. இப்படியான தீய வசதிகளுக்கு உரமூட்டுவதாக பணம் அமைகின்றது. இத்தனை சமூகப் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு அதைத் தாண்டி வருவதும் மாணவர்களுக்கான சவாலாய் அமைகின்றது.

மாணவர்களின் மற்றுமொரு சவாலாக அமைவது கட்டிளமைப் பருவ பிரச்சினையாகும். காற்றைக் கிழிக்க இரண்டு இறக்கைகள் இல்லாதே இப்பருவத்தினரின் குறை. கண்களிலும் இதழ்களிலும் வாலிபக் கதை எழுதி வண்ணம் செய்யும் பருவமாக இப்பருவம் காணப்படுகின்றது. கட்டிளமைப் பருவ மாணவர்களின் பிரச்சினையானது அவர்கள் உடல், உள சார்ந்தவை. பாலியல் ஹார்மோன்களின் தூண்டல்களால் ஏற்பட்ட பருவ எழுச்சிகளால் ஏற்படுபவை. பெரும்பாலும் இது பாலியல் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அதேபோன்று சிறுவர் துஷ்பிரயோகம் என்பது இன்று பெருமளவு காணப்படுகின்றது. சிறுவர்களை உடலால், வார்த்தையால், பாலியல் மற்றும் கவனிக்காமை போன்ற வகைகளில் துஷ்பிரயோகம் செய்யும் முறை இன்று காணப்படுகின்றது. இந்த வகைத் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சிறுவர்கள் பிற்காலத்தில் பலவகையான மனநலக் குறைபாடுகள் மற்றும் மனநோய்களை வெளிப்படுத்துகின்றனர். இத்தகையதானதொரு பிரச்சினை மாணவர்கள் எதிர்நோக்கும் கடுமையான சவாலாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான மாணவர்களின் சாவல்களை மாணவர்கள் வெற்றி கொள்வதற்கான தீர்வாக அமைபவர்கள் பெற்றோர்களும், ஆசிரியர்களும்தான். வீடுதான் பிள்ளையின் உலகம். அங்குதான் அது தனது அனுபவங்களையும், வாழ்க்கைக்கு

வேண்டிய கல்வியினையும் முதலில் கற்கின்றது. ஒருதாயின் பாத்திரங்களில் பிள்ளைக்கு அறிவூட்டும் ஆசிரியப் பணியும் ஒன்று. பிள்ளைகளின் உடலை, உணவாலும் உள்ளத்தை நற்பண்புகளாலும், அறிவை கல்வியாலும் பாதுகாக்கும் பொறுப்பு தாயுடையதே. பூரண வளர்ச்சிக்கான சூழ்நிலை வீட்டிலேயே அமைகின்றது. பிள்ளையிடம் நடந்து கொள்ளும் வகையினையும் சரியானபடி அமைத்துக் கொள்ளவேண்டும். குழந்தை எடுத்தற்கெல்லாம் தம்மையே எதிர்பார்த்திருப்பதைக் கண்டு பெற்றோருக்குத் தம்மை அறியாத ஒரு திருப்தி ஏற்படுவதுமுண்டு. அதைப் போக்கிக் கொண்டு பிள்ளையைத் தானாகவே கடமையைச் செய்யப் பெற்றோர் அனுமதிக்கவேண்டும். அப்பொழுதுதான் பிள்ளை தன்னம்பிக்கை பெற்று சாவல்களை நோக்கி ஆளுமைகளைப் பெற்றுக்கொள்ளும்.

வீட்டில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கான, அவர்கள் பூரண மலர்ச்சி பெற்று விளங்குவதற்காகவும் பெற்றோரின் அன்பும் ஆதரவும் வழிகாட்டலும் உரிய சூழ்நிலையும் அவசியம். பிள்ளைகளை தம் விருப்பம்போல் நடமாடவும், எண்ணங்களை வெளியிடவும் சுதந்திரம் கொடுக்க வேண்டும். பெற்றோர்கள் முதலில் தமது வாழ்க்கையை இலட்சியப் பற்றுடன் முன்மாதிரியாக, அமைதியாக, மகிழ்ச்சியாக நல்லமுறையில் அமைத்துக் கொண்டால் அதுவே குழந்தைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகிவிடும். இன்று வளர்ந்து வரும் தொலைபேசி, தொலைக்காட்சி, சினிமா, இணையம் என்பவற்றிலிருந்து மாணவர்களை மீட்பது பொறுப்பு மிக்க ஒவ்வோர் பெற்றோரின் கடமை மட்டுமன்றி பெற்றோர் எல்லா விடயங்களிலும் தாம் பண்பாளராகி முன் மாதிரியாகச் செயற்பட்டால் பிள்ளை தானாகத் திருந்தி விடும். இதற்குப் பதிலாக பிள்ளைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தைப் பயிற்றுவித்தல் அதனால் பெறும் அறிவு அனுபவங் கலந்ததென்பதால் சிலையில் எழுத்தாக மாணவர் மனதில் என்றும் நினைவுத் திரையாக இருந்து வரும்.

மற்றும் மேலைநாடுகளில் பாலியல் கல்வி பாடத் திட்டக் கல்வியுடன் பாடசாலைகளிலேயே கற்பிக்கப்படுவதால் பாதுகாப்பு ஆலோசனைகளும் அவற்றில் முன்மொழியப்பட்டிருக்கும். எமது கலாசாரம், மதநம்பிக்கைகள் அந்த அளவிற்கு எமது கல்வியை விரிவுபட அனுமதிக்கவில்லை. எனவே மாணவர்களின் கட்டிளமைக் காலப் பிரச்சினைக்குப் பெற்றோர்களே ஆலோசனை வழங்கவேண்டும். இவற்றை பெற்றோர் செய்யாது போயின், மாணவர்களின் நிலை கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டமைக்கு ஒப்பானது. தமது பிரச்சினையின் முடிச்சுக்களை தாமே அவிழ்க்க வேண்டியவர்களாக இருப்பதும் இவர்களின் பிரச்சினையாகும். தமது ஒத்த வயதினருடன் கலந்து பேசித் தீர்ப்பது குருடனுக்குக் குருடன் வழிகாட்டிய கதையாக அமையும். எனவே அதற்கான அறிவுரையை பெற்றோர் வழங்குவது சிறப்பானதாகும்.

இன்றைய சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு குடிகாரத் தந்தை, பேரன் பேத்திகளின் தயவில் பிள்ளைகளை விட்டு விட்டுத் தாய்மார் வெளிநாட்டுக்கு வேலை தேடிச் செல்வது போன்றவையும் காரணமாக அமைகின்றன. இதற்கான விழிப்புணர்வூட்டல்களை ஆசிரியர்களே சமூகத்திற்கும், மாணவர்களுக்கும் எடுத்துக் கூறும் வழிகாட்டிகளாகச் செயற்பட வேண்டும். எந்தவொரு பிள்ளைக்கும் அன்பும், பராமரிப்பும், பாதுகாப்பும் மிகமிக அவசியமாகும். அவற்றை வழங்கும் பொறுப்பு பெற்றோருடையதே. பிள்ளைகள் எதிர்காலத்தில் -

"கொள்ளிக்கும் பட்ட கடனும் என்னைக்

குறித்தல்லால், குனித் துள்ளித் திரிகின்ற காலத்திலே என்துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே என் தந்தையாகிய பாதகனே!"

என்று மனம் நோகாது பார்த்துக் கொள்ள வேண்டும். அன்பினாலும் பாது காப்பினாலும் மாணவர்களின் சவால்களை எதிர் நோக்குவதற்கான சக்தியாக பெற்றோர்கள் இருக்க வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் எச்சவாலையும் வெற்றிகரமாக கடந்து விடுவார்கள். மாணவர்கள் நரேந்திரன் ஆவதும், நர+இந்திரன் ஆவதும் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் வழிகாட்டலின் கீழ் அவர்கள் சவால்களை எதிர்கொள்ளும் திறனிலேயே அடங்கியுள்ளது.

**-செல்வி உ.சுதர்ஷனா**

**நீர்கொழும்பு விஜயரத்தினம்**

**இந்துமத்தி கல்லூரி**

# உங்கள் விருந்து



இறையருள் நிலவ மதிப்பு மிக்க 'தாயக ஒலி' ஆசிரியர்அவர்களுக்கு,

'வணக்கம். வாழ்க வளமுடன்' பங்குனி – சித்திரை 2014 தாயக ஒலி இதழில் என்னுடைய கவிதையும், கடிதமும் பிரசுரமானது கண்டு மகிழ்ந்தேன். நன்றி!

தாய் மண்ணின் பெருமை கூறும் தாயக ஒலி தரணியெல்லாம் புகழ் பரப்பித் தனக்கென்று ஓர் தனியான இடத்தைப் பிடிக்கும் என்ற நம்பிக்கையுடனே மீண்டும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுசீலா தர்மலிங்கம் (இணுவை சுசீலா)**

**சென்னை**




உலக சஞ்சிகை என்ற பெருமைக்குரிய 'தாயக ஒலி' யின் பதினொராவது இதழ் கண்டேன். குடம் ஏந்தும் நங்கையர்களை அட்டையில் கண்டு ஆனந்தமடைந்தேன். இலண்டன் விளம்பரங்கள் யாவும் அற்புதமாக வடிவடைக்கப்பட்டுள்ளன. பேனா முனையிலிருந்து ஆசிரியரின் ஆதங்கம் நெஞ்சை நெருடுகிறது. 'காரைக்கால் சிவன் கோயில் வரலாறு' என்னும் சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்களின் கட்டுரை பக்திப் பரவசமாக உள்ளது. எனது ஊர் கோயில் என்ற வகையிலே என் மனத்திற்குத் திருப்தியாக உள்ளது. 'உன்னையோ நீ அறிவாய்' என்ற தம்பு சிவா அண்ணனின் சிறுகதை பிள்ளைகளை வற்புறுத்திக் கட்டாய கல்யாணம் செய்து வைக்கும் முட்டாள் பெற்றோர்களுக்கு ஒரு சவுக்கடி. பிள்ளையின் தீர்க்கமான முடிவுக்கு பச்சைக்கொடி காட்டுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்.?

'அறிந்தவையும், தெரிந்தவையும்' வாசிக்கத் தூண்டும் செய்திகளாகவே உள்ளன. 'பொன்விழாக் கண்ட க.மு.தர்மராசாவின் ஆற்றல்மிகு சேவை' என்னும் தலைப்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எழுதிய கட்டுரையை வாசித்தேன். நான் யாழ்ப்பாணத்தில் சிறுவனாக இருக்கும் போது, காணி வழக்கு விடயமாக அப்புவுடன் இவரைக் காணச் சென்றிருந்தமை இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றது. மேலும் இலண்டன், அவுஸ்திரேலியா, கனடா விடயங்களையும் போட்டுக் கலக்குகிறீர்கள். உங்கள் பெருந்தன்மையான சேவையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. எனது சந்தாப் பணத்தை குஞ்சியப்பு செல்வநாயகம் கொண்டு வந்து தருவார். தவறாது 'தாயக ஒலி'யை அனுப்பி வையுங்கள்.

**-காசிநாதர் தர்மலிங்கம்**, சூரிச், சுவிட்ஸலாந்து.

# படிப்பகம் திறப்பு விழா



இணுவில் பொது நூலகம் சனசமுக நிலையத்தில் படிப் பகப்பிரிவு அமரர் திரு மதி அன்னலட்சுமி சின்னராசா அவர் களின் ஞாபகார்த்த மாக 02.06.2014 அன்று திறந்து வைக் கப்பட்டது. இணுவில் பொது நூலகத்தின் வளர்ச்சி இமலாய வளர்ச்சி எனின் மிகையாகாது. பல அறிஞர்கள், கிராமத்து இளைஞர்கள், தர்ம வான்கள், ஊர் நலன்விரும்பிகள் உழைப்பினா லும், இணுவை ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார், நொச்சியோலை சண்முகப் பெருமானின் அரு ளாசியினாலும் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து வருகின் றது.

1948 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையில் ஒரு சிறிய ஓலைக் கொட்டிலில் ஸ்ரீ கணேசா வாசிகசாலை என ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப் பானது பல்வேறு வடிவங்கைள மாற்றங்களைக் கொண்டு தற்பொழுது இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையமாக வளர்ச்சி கண்டு நிற்கிறது. பல்வேறு சோதனைகளைச் சந்தித்திருந்தாலும், சாதனைப் படிகளில் மேலேறி நிற்பதற்கு இணு வையூர் இளைஞர்களே முக்கிய பங்காளிகள்.

படிப்பக திறப்பு விழாவில் பலர் பங்கொண்டு நூலக வளர்ச்சியினை பாராட்டிய விதம் மறுக்க முடியாத உண்மையாகும். விழாவுக்குப் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக மறவன் புலவு திரு.கே.சச்சிதானந்தன், பொறியிலாளர் திரு.சி.தயாபரன், வடமாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திரு.முத்து இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு.மா.இரகுபதி, இலண்டன் மூதவை உறுப்பினர் திரு.க.மாணிக்க வாசகர் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மங்கல விளக்கேற்றல், தேவாரம், நிலையக் கொடியேற்றலைத் தொடர்ந்து படிப்பகம் திறந்து வைத்து பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பெற்றது. சிவஸ்ரீ வை.சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களும் செஞ்சொற்செல்வர் கலா நிதி ஆறு திருமுருகன் அவர்களும் ஆசியுரை களை வழங்க, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், கலாநிதி கந் தையா ஸ்ரீகணேசன், பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. ந.விஜயசுந்தரம் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர்.

தொடக்க உரையை பொதுநூலகக் காப்பாளர் பேராசிரியர் க.தேவராஜா அவர்கள் நிகழ்த்த நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.குமரன் அவர்கள் வழங்கினார்கள். தொடர்ந்து நூல் வெளியீட்டு வைபவம் இடம்பெற்றது.


**"உதிரத்தோடு உணர்வு கலந்து**
**உணவூட்டிய உத்தமிக்காய்**
**உத்தமபுத்திரர்களின் உத்தம எண்ணம்**
**ஊர் மாணவர்களை உயரச் செய்யும்"**

ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.நாகமுத்து சின்ன ராசா அவர்களின் புத்திரர்களால் செய்யப்பட்ட இக் கைங்கரியத்தின் மூலம் அறிவுப்பசி கொண்ட அனைவரும் பயன் பெறுவார்களாக என வாழ்த்தி நிற்கிறோம்.

**திருமதி வளர்மதி சுமாதரன்.**

நிகழ்வுகள் நினைவுகள் (கொழும்பு)

# தமிழ்மொழியின் சிறப்பு விழா





72 வருட வரலாற்றைக் கொண்ட கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ்மொழியின் சிறப்பு விழா வினை அண்மையில் கொண்டாடிப் பெருமை கண்டுள்ளது. இவ்விழாவில் தமிழ் மொழியில் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கட்டுரைப் போட்டியில் முன் னிலை பெற்ற மாணவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் தலைமையில் நடை பெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களும், கௌரவ விருந்தினராக கொழும்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி த.இராசரத்தினம் அவர்க ளும் கலந்து சிறப்பித்தனர்.

விருதுபெற்ற மாணவர்கள் மங்கல விளக் கேற்ற, கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவியர்களின் தமிழ் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. கல்விப் பணிக்குழுச் செயலாளர் மு.மனோகரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து தலைமையுரையை திரு.ஆ.இரகுபதி பால ஸ்ரீதரன் வழங்கினார்.

பிரதம விருந்தினர் உரையை வழங்கிய பேரா சிரியர் சபா ஜெயராசா தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கினார். "ஒரு மாணவன் தனது தாய்மொழி மூலம் கற்கும் போதுதான் சிந்தனை ஆற்றலைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று உளவியலாளர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். தாய்மொழியில் புலமை பெற்ற வனால்தான் வேற்று மொழிகளை இலகுவாகக் கற்றுக் கொள்ள முடியும். ஜப்பான் நாட்டவர்கள் ஜப் பானிய மொழியிலும் சீன நாட்டவர்கள் சீன மொழி யிலும் தமது முழுக் கல்வியையும் ஆய்வுகளை யும் மேற்கொண்டு தொழில்நுட்ப, விஞ்ஞானத் துறைகளில் உலக நாடுகளுடன் போட்டி போட்டு முன்னேற்றம் கண்டுள்ளனர். நாமும் எமது தாய் மொழியில் கற்று எமது மொழியையும் எமது விழுமியங்களையும் முன்னேற்ற வேண்டும்.

இலங்கையில் தமிழ் மாணவனொருவன் ஆரம்ப கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை தாய்மொழியில் கல்வி கற்றுப் பட்டங்களைப் பெறமுடியும். ஏன் தமிழ்மொழியில் கலாநிதிப் பட் டத்தைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியும். எமது பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஆங்கிலத்தில் கற்பதற்காக சர்வதேச பாடசாலைகளுக்கு கூடிய பணச் செலவுடன் அனுப்பிவரும் நிலை யைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையில் இக்கல்லூ ரிகள் தோற்றம் பெற்று 15 ஆண்டு கடந்த போதிலும் ஒரு விஞ்ஞானியையோ மருத்துவ நிபுணரையோ, பொறியியல் வல்லாளர்களையோ உருவாக்க முடிய வில்லை. எனவே எம்மவர்கள் தாய்மொழிக் கல்வி யில் மதிப்பு வைத்து தமது பிள்ளைகளின் எதிர் காலத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஆங்கிலக் கலப்

பின் காரணமாகத் தனித்துவத்தை இழந்து நிற்கின்றது. அந்த நிலை எமது நாட்டிலும் ஏற்பட விடாது எமது மொழியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்மொழி, கலைகள், பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றைப் பல ஆண்டுகளாகப் போற்றி வளர்த்துவரும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் பல்கலைக்கழக நூலகங்களுக்கு நிகரான ஒரு சிறந்த நூலகத்தைக் கொண்டுள்ளது. ஆய்வுத் துறை சார்ந்தவர்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள். மற்றைய நூலகங்களில் பெற முடியாத அரிய நூல்கள் எமது நூலகத்தில் இருப்பது பெருமைக்குரியதே.

மேலும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் ஆகியவற்றைப் போதிக்கும் வகையில் பட்டயக் கற்கை நெறியை ஆரம்பித்து செயற்பட்டு வருகின்றது. வயது வித்தியாசம் இன்றி பலர் பயனடைந்து வருகின்றார்கள். இன்றைய இந்த விழாவிலே விருதுகள் பெற்ற அத்தனை மாணவர் களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து எனது உரையை நிறைவுசெய்து கொள்ளுகின்றேன்." என்றார்.

தொடர்ந்து விருதுகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. பேராசிரியர் சபா ஜெயராசாவும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி த.இராசரத்தினம் அவர்களும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்தனர். தமிழ்ப் பாடத்தை சிறப்புப் பாடமாகக் கற்று உயர் புள்ளி பெற்றவர்களான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திருமதி சாமினி தியாகரன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற திரு.இராசரத்தினம் அன்பரசன், கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டதாரி செல்வி டிஹாசி நேமி நாதன் ஆகியோர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கான பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப் பெற்றன. யாழ்ப்பாணம் புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவன் செல்வன் ம.செ.விஸ்ரன் கீழ்ப் பிரிவில் முதலாம் இடத்தையும், பாசையூர் சென். அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலய மாணவி செல்வி றெ.தனுசியா மத்திய பிரிவில் முதலாம் இடத்தையும், கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலை மாணவன் செல்வன் கு.பவித்திரன் மேற்பிரிவில் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். மேலும் பரிசு பெற்ற இருபத்தொரு மாணவர்களில் வருகை தந்த மாணவர்களுக்கு மேடையில் பரிசுகள் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு நிகழ்வை தொடர்ந்து கொழும்பு விபுலானந்தா தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் வழங்கிய 'கூற்றம் புறம் கொம்பை கொட்டினார் இல்' என்னும் தலைப்பிலான வில்லுப்பாட்டும் இடம்பெற்றன. நிகழ்ச்சித் தொகுப்பினைக் கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் திருமதி பவானி முகுந்தன் சிறப்பான முறையில் தொகுத்து வழங்கினார். நன்றியுரையைக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. தம்பு சிவசுப்பிரமணியம் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். சங்ககீதத்துடன் தமிழ் மொழியின் சிறப்பு விழா இனிதே நிறைவெய்தியது.

**– அருந்தவன் கொழும்பு**




## நிகழ்வுகள் நினைவுகள் (லண்டன்)

# பரதநாட்டிய அரங்கேற்றம்



'இரசிகப்பிரியா' வழங்கிய செல்வி இந்துஜா சிவதாஸ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் மிகக் கோலாகலமாக அண்மையில் லண்டன் மாநகரே அதிசயக்கத்தக்க வகையில் ASH CROFT தியேட்டர் மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீமதி சித்ரா சோமசுந்தரம் அவர்களைக் குரு வாகக் கொண்டு அவரிடம் முறையாகப் பரதநாட்டி யத்தைத் கற்ற செல்வி இந்துஜா அவர்கள், ஏழு வயதிலேயே பரதம் என்னும் நடனக் கலை யினால் ஈர்க்கப்பட்டுத் தொடர்ந்து எட்டு ஆண்டு கள் ஆர்வத்துடன் கற்றுத் தேறியவர் என்ற வகை யில் அரங்கேற்றம் கண்டு சிறப் புப் பெறுகின்றார். பலருடைய பாராட்டைப் பெற்ற இந்த அரங்கேற்ற நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஸ்ரீமதி செல்வ லக்குமி இராமக் கிருஷ்ணனும், கௌரவ விருந்தி னராக ஸ்ரீமதி கீதா மகேஸ்வரம் அவர்களும் சிறப்பு விருந்தினராக சிவஸ்ரீ கைலை ஆர்.நாகநாத சிவம் குருக்களும் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

ஸ்ரீமதி சித்ரா சோமசுந்தரம் நட்டுவாங்கம் செய்ய, குயிலுவக் கலைஞர்களாக மிருதங்கம் ஸ்ரீ சோமசுந்தர தேசிகர், பாட்டு ஸ்ரீமதி சியாமளா விக்னேஸ்வரன், வயலின் ஸ்ரீ.ஏ.ஜி.ஏ. ஞானசுந்த ரம், வீணை ஸ்ரீமதி மாலினி தனபாலசிங்கம், புல் லாங்குழல் ஸ்ரீ பிச்சையப்பா ஞானவரதன், மோர் சிங் ஸ்ரீகந்தையா சிதம்பரநாதன் ஆகியோர் தமது உச்ச ஞானத்தை வழங்கி அரங்கேற்றத் திற்கு சுவையூட்டினர். அனுபவம்மிக்க இக்கலை ஞர்களின் அற்புத மான இசை விருந்து நாட்டியச் சுடரொளி இந்துஜா சிவதாஸின் நடன அபிநயங் களுக்கு மெருகூட்டி நின்றன. மண்டபம் நிறைந்த இரசிகப் பெருமக்களின் கரகோஷங்களுக்கு மத்தியில் அன்னநடையாள் அழகு மயிலென மேடைக்கு வந்த காட்சி அற்புமாக இருந்தது.

**இரா உதயணன் (இலண்டன்)**

# 190 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் உடுவில் மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற பெண்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இற்றைக்கு 190 வருடங்களுக்கு முன் கிறிஸ்தவ மிசனரிமாரினால் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. மிகப் பழமை வாய்ந்த இக்கல்லூரி ஆரம்ப காலத்தில் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்த போதிலும், காலக் கிரமத்தில் தாய்மொழிக் கல்விக்கும் உரிய இடத்தை வழங்கி வந்துள்ளது.

ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன், சிறப்பான நற்பழக்கவழக்கங்களையும் கல்வியுடன் ஊட்டி வளர்த்த பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. கல்வியுடன் ஏனைய துறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற இக்கல்லூரி இலங்கையளவில் மட்டுமன்றி உலகளவிலும் சாதனைகள் நிலைநாட்டி தாயகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. இத்தகைய உன்னதங்களுக்கு மகுடம் வைத்த உடுவில் மகளிர் கல்லூரியை 'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கின்றது.

# புகை பிடிப்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றி நோக்குவோம்

புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த உலக சுகாதார அமைப்பினால் மே மாதம் 31 ஆம் திகதி உலக புகைத்தலற்ற தினமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் புகைப்பிடிப்பதால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மே 31 ஆம் திகதி அனுட்டிப்பதென 1987 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பின் அங்கத்துவ நாடுகள் தீர்மானித்து உலக புகைத்தலற்ற தினத்தைத் தோற்றுவித்தன.

இருந்தும் இச்செயற்பாடு பயனுள்ளதாக அமைவில்லை என்பது துரதிர்ஷ்டமே. புகை பிடிப்பதால் உடலில் பல்வேறு பாதிப்புக்களுடன் நோய்களும் ஏற்படுகின்றன. ஆரம்பத்திலேயே இந்த தீய பழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைக்காவிடின் அது மரணத்திற்கு இட்டுச் செல்லுவதைத் தவிர்க்கமுடியாது.

புகை பிடிப்பதால் ஏற்படும் விளைவுகள் வருமாறு:-

- தலைமயிர் நிறம் மாற்றம் அடைகிறது
- மூளையானது புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகிறது.
- எப்போதும் புகைக்க வேண்டுமென்ற எண்ணத்தை வரவழைக்கும் நிலைக்கு மாற்றுகிறது. அதாவது அடிமையாக்குகிறது.
- கண் பார்வைக் குறைபாடுகள் ஏற்படும்.
- தோல் சுருங்கிப் போகும். அதாவது இளவயதிலேயே வயதான தோற்றத்தை அடைதல்.
- பற்களின் நிறமாற்றம், பல்லின் மேற்புறத்தில் ஏற்படும் அழற்சி (GINGI VITIS) போன்றவை
- வாய் மற்றும் தொண்டைப் பாதிப்புகள். உதாரணமாக உதடுகளில் வடு உண்டாவது, உணவுப்பாதை மற்றும் தொண்டைப் புற்றுநோய், சுவை நுகர்ச்சி குறைதல், துர்மணம் (கெட்ட வாசனை).
- இரத்த ஓட்டம் குறைவதால் கைகால்கள் செயலிழக்கும் தன்மை.
- இரத்தத்தில் நிகோடின் படிவுகள் சேர்தல்.
- நுரையீரல் தொற்று நோய்கள், சுவாசப்பை புற்று நோய், நாட்பட்ட சுவாச அடைப்பு நோய் (COPD) சுவாசப்பைத் தொற்று (Pneumonia) ஆஸ்துமா போன்றவை.
- மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு. (Heart Attack)
- ஈரல் புற்றுநோய் ஏற்படலாம்.
- இப்பழக்கம் வயிற்றையும் விட்டு வைப்பதில்லை. நாளடைவில் அல்சர், குடல், இரப்பை, சதைப் புற்றுநோய், நாடிவெடிப்பு (Aneurysm) போன்றவையும் ஏற்படும்.
- சிறுநீரக புற்றுநோய் (Kidney Cancer), சிறுநீர்ப்பை புற்று நோய் ஏற்படலாம்.
- எலும்பின் உறுதி குறைந்து வலுவிழத்தல். இதனால் எலும்பு முறிவு (Fracture) ஏற்படும் அபாயம்.
- இனப் பெருக்கத் தொகுதி பாதிக்கப்படுதல், உதாரணமாக விந்தணுக்களின் வீரியம் குறைதல், குழந்தையின்மை (Childlessness) போன்றவை.
- இரத்தத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறைதல், இரத்தப் புற்றுநோய் (Blood Cancer), இதனால் விரைவில் நோய் வாய்ப்படும் தன்மை உண்டாகுதல், கால்கள் வலுவிழந்து, குருதிச் சுற்றோட்டம் குறைந்து கால் பகுதியில் காயம் ஏற்படலாம்.

## நகைச்சுவைக் கதைகள்



இணுவை ரகு

எங்கோ கேட்டவை ④

# குறும்புக்காரச் சிறுவன்

முற்றுமுழுதாகப் பையன்களைக் கொண்ட அந்த ஆறாவது வகுப்பின் வகுப்பாசிரியர் கண்டிப்பிற்கு மிகவும் பேர் போனவர். குழப்படி செய்யும் பையன்களை அவர் தண்டிக்கும் விதமே அலாதியானது. முழங்காலில் நிற்கச் சொல்வார்,தனது வகுப்பு முடியும் வரை பெஞ்சின் மேலே நிற்கச் சொல்வார் அடியும் போடுவார்.

அப்படித்தான் ஒருநாள். புத்திக் கூர்மையும் நகைச்சுவை உணர்வும் மிகுந்த முகுந்தன் வகுப்பில் படிக்கும் நேரத்தில் குழப்படி செய்தான் என்று கண்ட வகுப்பாசிரியர் அவனை வகுப்பிலிருந்து வெளியே போகச் சொல்லி தமது பாட நேரம் முடியும் வரை வெளியே நிற்கச் சொல்லிப் பணித்தார்.

முகுந்தனும் பணிவன்புடன் வகுப்பறையை விட்டு வெளியேறினான்.

நிமிடங்கள் பறந்தன. எப்போது வகுப்பாசிரியரின் வகுப்பு முடியும் என்ற துடிப்புடன் கால்கடுக்க நின்றிருந்தான் முகுந்தன். அவனது நல்ல நேரமோ, கெட்ட நேரமோ தெரியாது. அவனது தந்தையின் நண்பரான, அதே கல்லூரியில் கற்பிக்கும் பிறிதொரு ஆசிரியர் அவனது வகுப்பு வழியே வந்தார்.

தனது அருமை நண்பரின் மகன் வகுப்பிற்கு வெளியே நிற்பதைப் பார்த்து, நிலைமையை ஊகித்தபடி " என்ன முகுந்தன், வெளியே நிற்கிறீர்? வகுப்பில் படிக்கவில்லையா?" என்று கேட்டு வைத்தார்.

முகுந்தன் கூறிய பதில் இதுதான்!

"வகுப்பிலே உள்ள எல்லாப் பையன்களும் குழப்படி செய்கிறார்கள். நானும் அவங்களோட சேர்ந்தால் குழப்படி செய்து கெட்டுப் போய்விடுவேனென்று கிளாஸ் ரீச்சர் என்னைப் பிடித்து வெளியில் விட்டுவிட்டார்" என்றானே பார்க்கலாம்!

'விடயமறிந்த' முகுந்தனின் தந்தையின் நண்பர் அவனது தோளில் செல்லமாகத் தட்டிவிட்டுத் தனது தலையைச் சொறிந்தபடி, தலைவிதியை நொந்தபடி, தனது வகுப்பறைக்கு நடையைக் கட்டினார்.



நான் எப்போதாயினும் ஏதேனும் பெறுமதி மிக்க கண்டுபிடிப்புகளைச் செய்திருப்பின், அது வேறேதேனும் சாமர்த்தியத்தைவிட பெரும்பாலும் பொறுமையான சாவதானத்தையே சார்ந்திருந்தது.


If I have ever made any valuble discoveries, it has been due more to patient attention, than to any other talent.

**சேர் ஐசாக் நியூட்டன்**

**Sir Isaac Newton** (1642 - 1727)

கதிரவேலு மகாதேவா

# நூறு ஆண்டுகளைக் கடந்த இந்திய சினிமாவில் தமிழ்த் திரைப்படங்களின் வகிபாகம்



1913 ஆம் ஆண்டில் மும்பாயில் தாதா சாகிப் பால்கே என்பவர் ஹரிச்சந்திரா என்ற முதலாவது மௌனப் படத்தைத் தயாரித்தார். 1916 இல் நடராஜமுதலியார் என்ற தமிழர் கீச்சகவதம் என்ற மௌனப் படத்தினை வெளியிட்டார். 1931.10.31 இல் முதல் பேசும் படம் "காளிதாஸ்" மும்பாயில் வெளியானது. T.P.வெங்கடேசனும், T.P.ராஜ லட்சுமியும் முக்கிய பாத்திரங்களில் தோன்றி தமிழ், தெலுங்கு மொழிகளில் பேசி நடித்தனர். H.M.ரெட்டி முதல் இயக்குநரானார்.

முழுமையான தமிழ் பேசும் படம் "காலவா" 1932 இல் வெளியானது. முதலாவது சமூகப் படம் TKS.சகோதரர்களின் 'மேனகா' 1935 இல் திரையிடப்பட்டது. சென்னையில் முதல் ஸ்ரூடியோ 1934 இல் (ஸ்ரீநிவாச நியூடோன்) நாராயணன் என்பவரால் திறக்கப்பட்டது. இந்த நூறு ஆண்டுகளில் இந்திப் படங்களுக்கு அடுத்ததாக எண்ணிக்கை அடிப்படையில் தமிழ் திரைப்படங்கள் இரண்டாவது இடதில் விளங்கின.

புராண இதிகாச சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு படங்கள் உருவாகின. தொடக்க காலங்களில், 1936 இல் சத்தியசீலன் படத்தில் அறிமுகமான M.K.தியாகராசபாகவதர், பின்னர் P.U.சின்னப்பா, M.K.ராதா, N.S.கிருஷ்ணன் ஆகியோர் முன்னணி நடிகர்களாக விளங்கினர். ராஜா சாண்டோ, எல்லீஸ் R.டங்கன், M.சுப்பிரமணியம், G.ராம்நாத் ஆகியோர் பல படங்களை இயக்கினர். வசந்த கோகிலம், S.D.சுப்புலட் சுமி, T.R.ராஜகுமாரி, எம்.எஸ்.சுப்புலட்சுமி முன்னணிக் கதாநாயகிகள். வசனம் பேசி அத்துடன் பாடி நடிப்பவர்களுக்கு முதலிடம் வழங்கப்பட்டது.

1940 களில் ஏ.வி.மெய்யப்பன், எஸ்.எஸ். வாசன் ஆகியோர் பல படங்களை இயக்கத் தொடங்கினர். 1944 இல் பாகவதர் நடித்து வெளியான 'ஹரிதாஸ்' ஒரே அரங்கில் தொடர்ந்து 2 ஆண்டு கள் ஓடி சாதனை புரிந்தது. இன்று வரை அந்த சாதனை முறியடிக்கப்படவில்லை. P.U. சின்னப்பா வின் 'மனோன்மணி', 'கண்ணகி' படங்கள் வெற்றி பெற்றவை. M.K.ராதா, T.R.ராஜகுமாரி நடித்த ஜெமினியின் 'சந்திரலேகா' தமிழ், இந்தி மொழிகளில் 700 பிரதிகள் எடுத்து வெளியிடப்பட்டது. பெரும் பொருட்செலவில் உருவானது.

1940 பிற்பகுதிகளில், சுதந்திரவேட்கை, பெண் அடிமைத்தனம், பரத்தமை ஒழிப்பு போன்ற சமூக சீர்திருத்தப் படங்கள் வெளியாகின. அண்ணாவின் 'வேலைக்காரி'. N.S.கிருஷ்ணனின் 'நல்லதம்பி' போன்றவை வரவேற்பைப் பெற்றன. K.R.ராமசாமி, T.R.மகாலிங்கம் நடிப்பில் முதன்மை பெற்றனர். G.ராமநாதன் 1940 - 1960 வரை இசையமைப்பாளராக ஏராளமான இனிய பாடல் களைத் தந்தார். கலைஞர் கருணாநிதி, அண்ணா

அவர்களின் கதை வசனங்கள் திரையுலகில் மாற்றங்களை ஏற்படுத்தின. 1947 இல் 'மருத நாட்டு இளவரசி' மூலம் எம்.ஜி.ஆரும் 1952 இல் 'பராசக்தி' மூலம் சிவாஜிகணேசனும் முன்னணிக் கதாநாயகர்களாகினர். பத்மினி, சாவித்திரி, P.பானுமதி, G.வரலட்சுமி, அஞ்சலிதேவி ஆகியோர் பிரபல நடிகைகள். ஜெமினிகணேசன் காதல் மன்னனாக மிளிர்ந்தார். (1950, 60 களில்)

1950 தொடக்க காலத்தில் கதாநாயகர்களும் இயக்குநர்களும் எழுச்சி பெற்றனர். கதாசிரியர் ஸ்ரீதர் 'ரத்தபாசம்' படம் மூலம் அறிமுகமாகி 1959 இல் 'கல்யாண பரிசு' மூலம் இயக்குநரானார். 1962 இல் அவரது 'நெஞ்சில் ஓர் ஆலயம்' புகழ் பெற்ற படம். 1956 இல் முதல் வண்ணப் படமான 'அலிபாபாவும் 40 திருடர்களும்' T.R. சுந்தரத்தின் நெறியாள்கையில் உருவாகியது. P.R.பந்துலு வீரபாண்டிய கட்டப்பொம்மன், கப்பலோட்டிய தமிழன், கர்ணன் போன்ற சரித்திரப் படங்களைத் தயாரித்தார்.

A.பீம்சிங், குடும்ப பாசத்தினை மையமாக வைத்து 'ப' வரிசைப் படங்களாகத் தந்தார். கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யானசுந்தரம், மருதகாசி பாடல்களை எழுதினர். எம்.எஸ். விஸ்வநாதன், K.V.மகாதேவன் பல படங்களுக்கு இசையமைத்தனர். K.S.கோபாலகிருஷ்ணனும் சிறந்த படங்களைத் தந்தார். ஏ.பி.நாகராஜன் பக்திப் படங்களை வண்ணத்திரையில் வெளியிட்டு பாராட்டு பெற்றார். 1968 இல் 'தில்லானா மோகனாம்பாள்' கலைகளின் சிறப்பினைக் காட்டியது. 1958 இல் எம்.ஜி.ஆர். 'நாடோடி மன்னன்' என்ற படத்தைத் தாமே இயக்கி இரு வேடங்களில் நடித்தார்.

1970 களில் புதிய மாற்றம் ஏற்பட்டது. பாலசந்தர், பாரதிராஜா, மகேந்திரன் போன்றோர் புதிய கருத்துக்களுடன் படங்களைப் படைத்தனர். பாரதிராஜாவும் இசையமைப்பாளர் இளையராஜாவும் கிராமங்களை நோக்கி தமது கவனத்தைச் செலுத்தினர். பாலசந்தரின் 'தண்ணீர் தண்ணீர்' சிறப்புப் பெற்றது. பாரதிராஜவின் '16 வயதினிலே' மூலம் கமலஹாசன் நட்சத்திர அந்தஸ்து பெற்றார். மகேந்திரனின் 'முள்ளும் மலரும்' ரஜினிகாந்திற்கு நல்ல வரவேற்பினைக் கொடுத்தது. இருவரும் 2000 வரை தமிழ்த் திரையுலகை ஆக்கிரமித்தனர். பாலு மகேந்திராவின் 'மூன்றாம் பிறை' கமலுக்கு தேசிய விருதினைப் பெற்றுக் கொடுத்தது. பாலு மகேந்திரா சிறந்த ஒளிபதிவாளராகவும், இயக்குநராகவும் பரிமளித்தார். 1980 களில் மணிரத்தினம் அறிமுகமாகி 'ரோஜா' என்ற சிறந்த படத்தினை தயாரித்தார். 1987 இல் நாயகன் மூலம் கமல் மறுபடியும் தேசிய விருது பெற் றார். பாரதிராஜாவின் 'கருத்தம்மா' (1984), வேதம் புதிது (1987) பல விருதுகளை வென்றன.

1990 களில் அகத்தியன் 'காதல் கோட்டை' படத்திற்காக சிறந்த இயக்குநர் என்ற தேசிய விருதினைப் பெற்றார். சேரன் 1997 இல் 'பாரதி கண்ணம்மா' என்ற சிறந்த படத்தினைத் தந்தார். சமூக ஏற்றத் தாழ்வுகளை அப்படம் சிறப்பாக எடுத்துக்காட்டியது. 2000 ஆம் ஆண்டுகளில் மறுபடியும் திருப்பம் ஏற்பட்டது. புதிய கலை வடிவங்கள், தொழில்நுட்பங்கள் அறிமுகமாகின. வன்முறை கலாசாரம், தமிழ்ப் பண்பாட்டின் வீழ்ச்சி என்பன படங்களில் பிரதிபலித்தன.

இந்தியத் தமிழ்ப்படங்கள் பெரும்பாலானவை கலாசாரச் சீரழிவுகளுக்கு வித்திடுவனவாக அமைந்துள்ளமை வேதனை தரும் விடயம். இளசுகள் திசை மாறிச் செல்வதற்கு தமிழ்த் திரைப்படங்கள்தான் காரணமாக உள்ளன எனப் பரவலாகப் பேசப்படுகின்றது.



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் 04.05. 2014 அன்று வெளியிடப்பெற்ற காப்பியக்கோ புலவர் மணி ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் எல்லாள காவிய வெளியீட்டு விழாவில் கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயலாளரும், தாயக ஒலி சஞ்சிகை ஆசிரியருமான தமிழ் தென்றல் தம்பு சிவசுப்பிரமணியம் அவர்கள் நூலாசிரியரிடமிருந்து சிறப்புப் பிரதி பெறுகின்றார். மத்தியில் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள்.

# நல்லூர்க் கந்தா!




நல்லூர்க் கந்தன் தாழடி பணிந்தேன்
நலங்கள் யாவும் பெற்றிடத் துணிந்தேன்
தேரடிதனில் தாடியோடிருந்த தவமுனி
தேசிகன் செல்லப்பன் திருவடி சரணம்

நம்மவர் பட்டிடும் துன்பங்கள் நீங்கி
நாளுமே யுந்தன் பதியினில் தங்கி
பண்ணிசை யோடு உன்புகழ் ஓங்கி
பாடிட வரமருள் நல்லூர்க் கந்தா!

.......நல்லூர்க் கந்தா

நாளுமே யுன்பதி வந்திட வேண்டும்
கேளுமே எம்குறை தீர்த்திட வேண்டும்
வாழுமோ எம்குடி வளமுடன் அங்கினி - இல்லைத்
தாழுமோ எம்குடி சொல்லிடு நல்லூர்க் கந்தா!

....... நல்லூர்க் கந்தா!

கோடி கோடியாய் செல்வங்கள் சேர்த்தனர்
நாடி நாடியே தினம் வந்துனைத் துதித்தனர்
பாடிப் பாடியே பரவசம் பெற்றனர்
வாடி வாடியே நின்றிடும் நிலைதனைப் பாராயோ

....... நல்லூர்க் கந்தா

இழப்பதற்கு இனியொன்று மில்லையே
குடிப்பதற்கு ஓர் நீர்த் திவலையுமின்றியே
வடிப்பதற்கு கண்ணில் ஒரு துளி நீருமில்லையே
மடிந்த போதெல்லாம் மனம் இரங்கிடவில்லையே

....... நல்லூர்க் கந்தா

என்ன பாவம் செய்தனர் எம்மினம் - இனி
என்ன செய்ய இருக்குது எம் தமிழ்க்குடி
எம்மவர் வாழ்வு உயர்ந்திட வழி செய்திடு
எனியுனை வாயாரப் பாடிமகிழ்ந்திட வரமருள்

....... நல்லூர்க் கந்தா!



லண்டனிலிருந்து ...........

திருமலை பாலா

அறிந்ததைச் சொல்ல வந்தோம்

## - வறுமையை ஒழிப்போம் -

# பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகத்திற்கு வறுமையே காரணம்

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகத்திற்கு வறுமையே அடிப் படை மூல காரணமாக காணப்படுகின் றது. எனவே வெற்றிகரமான வறுமை ஒழிப் புத் திட்டங்கள் கிளிநொச்சியில் நடை முறைப்படுத்தப்படும் போதே இவர்கள் மீதான வன்முறைகளையும் கட்டுப்படுத்த முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே கிட்டத் தட்ட 5857 பெண்களைத் தலைமைத்துவ மாகக் கொண்ட குடும்பங்கள் இருக்கின் றன. இது இந்த மாவட்டத்தின் சனத் தொகையில் கிட்டத்தட்ட 15 சதவீத மானது. இதில் இயற்கையால் கணவனை இழந்தவர்கள், யுத்தத்தால் கணவனை இழந்தவர்கள், கணவனால் கைவிடப்பட்ட வர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் உள்ள னர். ஏனைய மாவட்டங்ளுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை இந்த மாவட் டத்தின் சனத்தொகையின் மிகப் பெரிய ஒரு வீதமாக இருக்கின்றது.

அத்தோடு இந்த மாவட்டத்திலே 32, 683 சிறுவர்கள் இருக்கின்றார்கள். இந்த சிறு வர்களின் எதிர்காலம் தொடர்பான ஒரு மிகப் பெரிய பிரச்சினை இங்கு இருக்கின் றது. கிட்டத்தட்ட 9000 சிறுவர்கள் முன் பள்ளிகளிலேயே கற்கின்றார்கள். இந்த முன் பள்ளிகளிலே கல்வி கற்கும் சிறுவர்கள் எல்லோரும் மிகவும் நெருக்கடியான யுத்த காலத்தில் பிறந்தவர்கள். இவர்களின் போஷாக்கு தொடர்பாக ஒரு மிகப் பெரிய பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டி யிருக்கின்றது. இவர்கள் யுத்த காலத்தில் பிறந்தபடியால் போஷாக்கு குறைபாட் டிற்கு உள்ளான வர்களாகக் காணப்படு கின்றனர். எனவே இன்றைய சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டிய பொறுப்பு இருக்கின்றது.

அதுபோல 472 சிறுவர்கள் பெற்றோரை இழந்தவர்களாக இந்த மாவட்டத்திலேயே இருக்கின்றார்கள். தாயையும் தந்தையை யும் இழந்த சிறுவர்கள் உறவினர்களிடம் அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் தங்கி வாழ்கின்றார்கள். குடும்பத்தில் அப்பாவை அல்லது அம்மாவை இழந்த 4038 சிறுவர்கள் இந்த மாவட்டத்திலேயே இருக்கின்றார்கள். 332 சிறுவர்கள் மாற்று வலுவுள்ளோர்களாக இருக்கின்றார்கள். ஆகவே சிறுவர்கள் பராமரிப்பு என்பது இலங்கையில் ஏனைய மாவட்டங்களை விட இந்த மாவட்டத்திலேயே முக்கிய மாக அவதானம் செலுத்த வேண்டிய விடயமாகும்.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர் பில் இந்த மாவட்டம் எதிர்கொள்கின்ற பிரச்சினைக்கு வறுமைதான் பிரதான காரணமாக இருக்கின்றது.

பல சிறுவர்கள் இளவயதிலேயே - கிட் டத்தட்ட 16,17 வயதிலேயே - திருமணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் கடந்த காலத்தில் ஏற்பட்டது. ஏனென்றால் கட்டாய ஆட்சேர்ப்பிலிருந்து தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக பெற்றோர்கள் இள வயதிலேயே தங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். அந்த இளவயது சிறுவர்கள் பெற்ற பிள்ளை

களால் பலர் இன்று போஷாக்கின்மையால் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அத்தோடு, சிறுவயது திருமணத்தினால் குறுகிய காலத்துக்குள்ளே குடும்ப முரண்பாடுகள் ஏற்பட்டு, அதிக குடும்பங்கள் சீர்குலைந்து காணப்படுகின்றன. இதில் பல குடும்பங்கள் தங்களுக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டு பிரிந்து வாழ்கின்றன.

மேலும் கிட்டதட்ட 800 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல தவறியிருக்கின்றார்கள். இங்கு 41 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 130,000 மக்களைக் கொண்ட இந்த மாவட்டத்திலே 800 மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை என்றால் அது ஒரு பெரிய வீதம்தான். இதற்குப் பிரதான காரணம் வறுமை. ஆகவே இந்த மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையாக இருந்தால் என்ன, சிறுவர்களுக்கு எதிரான வன்முறையாக இருந்தால் என்ன, அதெற்கெல்லாம் அடிப்படைப் பிரச்சினையாக இருப்பது வறுமையே. எனவே வறுமையை ஒழிக்கும் போது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகள், துஷ்பிரயோகங்களைத் தடுத்து, அவர்களது உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

# எமது பிள்ளைகளின் எதிர்காலம்



காலம் காலமாக நாம் பாதுகாத்து வந்த பல பண்பாட்டு அம்சங்கள் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. ஒரு மாறி வரும் சூழ்நிலையில் இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம். இத்தகைய நிலையில் எம் இனம் பல சவால்களை எதிர்நோக்கி நிற்கிறது. இந்நிலை தொடருமானால் எமது இனத்தினுடைய இருப்பு கேள்விக்குள்ளாக நேரிடலாம். இத்தகைய நிலைமையினை மாற்றுவதற்காக நாம் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இன்று எமது கட்டுப்பாட்டுக்குள் வளர்கின்ற சிறார்கள் நாளைய எமது சமுதாயத்தின் தூண்கள். இவர்களை நாம் சரியாக வழிநடத்தத் தவறும் பட்சத்தில் இவர்கள் தவறான பாதையை நோக்கித் திருப்பப்படலாம். திட்டமிடப்பட்ட வகையில் பல கவனக் கலைப்பான்கள் எமது பகுதியில் உருவாக்கிவிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பெற்றோரும் ஓர் இலட்சியத்தினை நோக்கி உங்கள் பிள்ளைகள் முன்னேற ஏற்பாடு செய்ய வேண்டும். ஓர் உயரிய இலட்சியம் அவர்கள் மனதில் விதைக்கப்படவேண்டும். இந்நிலை அவர்களை வாழ்வில் உயர்வடைச் செய்யும். எமது பகுதியில் இருக்கின்ற கல்விமான்களை முன்மாதிரியாகக் கொள்ள முடியும்.

இன்றைய மிக நெருக்கீடான சூழலில் வெறும் பொருளாதார தோற்றத்திற்கே நாம் அனைவரும் முக்கியத்துமளிக்கின்றோம். இந்நிலையில் பிள்ளைகளின் கல்வி மற்றும் விளையாட்டு மீதான ஆர்வம் குறைவடையும் நிலை உருவாகியுள்ளது. இது ஆரோக்கியமான ஒரு நிலை அல்ல. இதேவேளை நாம் இன்று ஏட்டுக் கல்விக்கே அதிக முக்கியத்துவம் வழங்குகின்றோம். விளையாட்டிலும் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். அப்பொழுதுதான் முழுமையான கல்வியைப் பெறக்கூடியதாக இருக்கும்.

**திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்**
**- வலிமேற்கு பிரதேச சபை தவிசாளர்**

# பற்றுறுதி கொண்ட கவிதை வரிகள்

நோபல் பரிசினை இலக்கியத்திற்காகப் பெற்றுக்கொண்ட ரவீந்திர நாத் தாகூரின் 'கீதாஞ்சலி' ஆங்கிலம் , தமிழ், ஜேர்மனி, பிரெஞ்சு, இத்தாலி, ரஸ்ஷியன், ஸ்பானிஷ், கிறீக், போத்துக்கல், சுவீடிஷ், ஹீப்ரூ உள்ளிட்ட உலகில் வழக்கிலுள்ள மிக அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.



## வங்கக் கவிஞனின் இதய எண்ணங்கள்

"பொன் போன்ற என் வங்காள நாடே!
நான் உன்னை நேசிக்கிறேன்
வான் நிறைந்த உன்தென்றல் என் இதயத்தைப்
புல்லாங்குழலாக மாற்றி எந்நேரமும் இசையாக மீட்டும்
என் அருமைத் தாயகமே வசந்த காலத்தில்
உனது மாந்தோப்பில் இருந்து வீசும் மணம்
என்னை உல்லாசமாகத் தாலாட்டும்
என் இதயத்தின் எண்ணங்கள் அற்புதமானவை!"



முதலாளித்துவத்தின் கைக்கூலியும், ஏகாதிபத்தியத்தின் காவலனுமான ஜாரின் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்ட வேளை, லெனின் பெல்கிரட் நகரத்துக்கு வருகிறார் என்று கேள்விப்பட்ட மக்கள் கரைபுரண்ட உற்சாகத்தில் காணப்பட்டார்கள். அவர் வருகைக்காகப் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஆவலோடு கட்டுமீறித் திரண்டுவிட்டார்கள்.


## மக்கள் முன் பாடப்பட்ட விடுதலை கீதம்

"பழமை லோகம் மறையுது
புதுமை ஆட்சி பிறக்குது
கொடுங்கோலாட்சி சரியுது
கொடுமையிதோ டொழியுது

தொழிலோர் ஆட்சி வருகுது
எழிலோர் வந்து கூடுவீர்
தோழர்களே சேருவீர்
தோள் புடைத்து எழுகுவீர்"

வாழ்த்துக்கள்

# செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனின் 53 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



ஆறுதிரு முருகனிவர்
அறப்பணிகள் செய்கின்ற
ஆறுஇது எனக்காட்டும்
அகிலத்தின் பேராளன்!

தனக்கென்று வாழாமல்
பிறர்க்கெனவே வாழ்கின்ற
தண்ணளியோன் திருமுருகன்
தவமைந்தன் வாழியவே!

நலிவுற்றீர் அஞ்சாதீர்
நான்இருக்கின் றேன்என்று
வலுவூட்டி வாழவைக்கும்
வள்ளல்நீ வாழியவே!

அறப்பணிகள் சிறக்கவென்று
அருந்தவங்கள் செய்திந்தப்
பிறப்பெடுத்து வந்துதித்த
பெருந்தகை நீ வாழியவே!

-சைவப் புலவர் சு.செல்லத்துரை
இளவாலை.

## பிறந்த நாள் வாழ்த்துக் கீதம்

இராகம் : ஹம்சத்துவனி — தாளம் : ஆதி

பல்லவி

சந்ததம் வாழியவே சிறந்து
சந்ததம் வாழியவே — சிறந்து.....

சரணம்

அன்பும் அறவாழ்வும் ஆற்றுதவ முறையும்
இன்பநல வுரையும் எண்ணில் குரை நிறைவும்
தன்புகழ் தானறியாத் தன்மைத் தகையாளன்
மன்புகழார் ஆறு திருமுருகன் மகிழ்ந்து — சந்ததம்.....

அறப்பணி செய்தலொன்றே தவப்பணி யாகுமென்று
அல்லும் பகலும் என்றும் அயராதுபணி செய்யும்
வல்லவனே இணுவை மண்தந்த மாமணியே
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழியவே — சந்ததம்....

- இணுவில் சி.அமிர்தலிங்கம் - லண்டன்

28.05.2014 அன்று தமது 53 ஆவது பிறந்த தினத்தைக் கண்ட செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களை 'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கிறது.

வாழ்த்துக்கள்

# அகவை 88 கண்ட எழுத்துலகின் மகோன்னதம் டொமினிக் ஜீவா



இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றில் சாதனைகள் பல படைத்த முது பெரும் எழுத்தாளராக முகிழ்ந்து நிற்பவர் டொமினிக் ஜீவா என்றால் அது மிகை யாகாது. "மல்லிகை" என்னும் இலக்கியச் சஞ்சிகையை சுமார் 48 வருட காலம் தொடர்ந்து வெளியிட்டு வந்தவர் என்ற வகையில் பெரும் இமாலய சாதனை நிலைநாட்டி உள்ளார். 1962 ஆம் ஆண்டு முதன்முதலாக தமிழ்ச் சிறுகதைத் தொகுதிக்கு சாகித்திய விருது இவரது "தண்ணீரும் கண்ணீரும்" என்னும் தொகுதிக்கே கிடைத்தமை பெருமையாகும். தமது 'மல்லிகை' சஞ்சிகையின் மூலம் பல எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து அவர்களை வளர்த்து விட்டவர் என்ற சிறப்பும் இவரைச் சாரும்.

"மல்லிகைப் பந்தல்" மூலம் பல எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டவர் என்ற வகையில் பலரின் மதிப்புக்குரியவரானவர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வந்த மூத்த எழுத்தாளர். இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் எழுத்துலக நண்பர்களால் பெரிதும் மதிக்கப்பட்டு புகழாரம் சூட்டப்பட்டவர். அன்னாரின் 88 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி 'தாயக ஒலி' தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# 200 ஆண்டு பழமை வாய்ந்த மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரி

மெதடிஸ்த திருச்சபையினால் கிழக்கு மாகாண மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக நிறுவப்பட்ட இக்கல்லூரி 200 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கின்றது. மெதடிஸ்த கல்லூரியின் 200 ஆவது ஆண்டு விழா மிகச் சிறப்பான முறையில் ஜூன் 29 ஆம் திகதி (29.06.2014 அன்று கொண்டாடப்பட்டது. அதையொட்டி பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வாகன ஊர்திப் பவனி மட்டு. திருகோணமலை மட்டு. கல்முனை, அக்கரைப்பற்று சம்மாந்துறை பொத்துவில் பாதைகளில் பயணித்ததாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். 200 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரிக்கு தனது வாழ்த்துக் களைத் 'தாயக ஒலி' பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறது.




LWAtraining
skills for life skills for work
அ Education Training Skills
FREE ENGLISH CLASSES
FREE CLASSES OPEN TO ALL ENROL TODAY!
ESOL CITIZENSHIP
FAST TRACK CITIZENSHIP TEST
DRIVING THEORY
PASS YOUR DRIVING THEORY WITH ESOL
AAT & SAGE TRAINING
BOOKKEEPING AND PAYROLL COURSES
PERSONAL AND PREMISES LICENCE
AWARD FOR PERSONAL LICENCE HOLDERS (APLH)
FOOD SAFETY LEVEL 2
FOOD SAFETY AND HYGIENE COURSES
SECURITY
SIA SECURITY COURSES
SECURITY COURSES IN SIA, CCTV AND MORE
LWAtraining
skills for life skills for work
LONDON WIMBLEDON ACADEMY
For details please contact us:
020 3405 1887 | 07703 193949 | 07803 903897
www.lwatraining.co.uk info@lwatraining.co.uk
ESB
sage

# Kulendran Immigration Law Chambers



(அங்கீகார எண் : F200100055)

## 21வது ஆண்டு சேவை

**குடிவரவு விண்ணப்பங்கள் / குடிவரவு மேன்முறையீடுகள் மற்றும் சகலவிதமான குடிவரவு தேவைகளுக்கும்.**


- நாடு கடத்தலுக்கு எதிரான மேன்முறையீடுகள்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்
- உங்கள் உறவினர்களை வரவழைத்தல்
- சகலவிதமான விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடுகள்
- Bail Application
- Asylum Appeals
- Human Rights Application / Appeals

"லண்டன் பல்கலைக்கழக / கல்லூரிகளுக்கான அனுமதிகள் / விசா நீடிப்புக்கள் / Prospective Student Visa விண்ணப்ப ஆலோசனைகள்"

Tel No: 020 8542 8222/ 020 8682 4494
Fax No : 020 8542 8666
Mobile : 07769185592
E-mail : kilc_work@yahoo.co.uk

OISC

**90, High Street,
Colliers Wood
London
SW19 2BT**



# செவாலியர், தமிழ்க் கங்கை
# கலாநிதி, இளவாலை அமுதுப் புலவர்
# நினைவுப் பரிசுப் போட்டி – 2014

ஈழத்தின் முதுபெரும் புலவரும், எழுத்தாளரும், தமிழ் ஆசானும், இலண்டனில் வாழ்ந்தவருமான அமரர் இளவாலை அமுதுப் புலவரின் ஞாபகார்த்தமாக அகில இலங்கை ரீதியில் "தாயக ஒலி" சஞ்சிகை பாடசாலை மாணவர்களுக்காக நடத்தும் போட்டிகள்

I) கவிதை II) கட்டுரை III) பேச்சுவன்மை

என மூன்று துறைசார்ந்ததாக அமையும்.

| | |
|---|---|
| முதற் பரிசு | - ரூபா 5000 /= |
| இரண்டாம் பரிசு | - ரூபா 3000 /= |
| மூன்றாம் பரிசு | - ரூபா 1000 /= |

மேலும் மூன்று போட்டியாளருக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்படும்.

**கவிதைத் தலைப்பு**
'புத்துலகம் படைப்போம்'

**கட்டுரைத் தலைப்பு**
'தாயக மண்ணின் தனித்துவம்'

**பேச்சுவன்மைத் தலைப்பு**
'தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்'

## கவிதை, கட்டுரைக்கான போட்டி முடிவு திகதி 31.08.2014

மாணவர்கள் வகுப்பாசிரியரின் கையொப்பத்துடன் அதிபர் ஊடாக சொந்தப் படைப்பு என்று உறுதிப்பாட்டுடன் கீழே உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள். பேச்சு வன்மைப் போட்டியில் கலந்துகொள்பவர்கள் அதிபர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவேண்டும். போட்டித் திகதியும் போட்டி நடைபெறும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி: 'ஆசிரியர்', தாயக ஒலி,
9 2/1 நெல்சன் பிளேஸ்,
கொழும்பு-06,
இலங்கை.
தொ.பே. 009411264124

ஆதரவு வழங்குவோர்:
திரு. திருமதி
A.F.இளஞ்செழியன்
தம்பதியினர்
இலண்டன்


MALIK & MALIK
SOLICITORS
*Commissioners for Oaths*
A. F. ILANCHELIAN MBA
*Solicitor*
Tel: 020 8830 3050
Fax: 020 8830 3051
Mobile: 07939 474 342 (emergency only - 24 hours)
Crime Department: 020 8830 1991
malikandmalik@lawyer.com
234-236 High Road
Willesden
London
NW10 2NX




சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440